F.IV.A

[illegible]
N°26
[illegible]

# DISTRICT HISTORY
# TRICHINOPOLY

28 SEP192
MADRAS

ஜில்லா சரித்திரம்

# திரிச்சிராப்பள்ளி

சென்னை ஆர்க்கியலாஜிகல் இலாகா
P. V. ஜகதீச ஐயரால்
எழுதப்பட்டு

சென்னை சட்டசபைத் தலைவர்
கனம் திவான்பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை
அவர்கள் முகவுரையுடன்
கூடியது
[படங்களுடன்]

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1925

All rights reserved]

[விலை 5 அணா

148298

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

# FOREWORD

I cannot commend too highly the educational value of this series of *gazetteers* in Tamil. I have been long wishing that the people of every town and village should have ready to hand a complete guide to objects of local interest and particularly to local antiquarian remains; and this series by a competent archæologist like Mr. P. V. Jagadisa Aiyar will go far to fulfil this desideratum.

*Fort St. George,*
19-10-1924 — L. D. SAWMIKANNU


திருச்சிராப்பள்ளி ஜில்லா
78 0'
78 30'
79 0'
காவேரி
கரூர் தாலுக்கா
முசிரி தாலுக்கா
குளித்தலை தாலுக்கா
பெரம்பலூர் தாலுக்கா
தாலுக்கா
உடையார்பாளையம் தாலுக்கா
புதுக்கோட்டை

# AUTHOR'S PREFACE

Love for one's own country and institutions is a virtue highly essential in all its citizens for its prosperity and well-being. Every attempt should be made therefore to cherish and cultivate this virtue by *one and all.* The study of the history of one's own country in general, and one's own district in particular, should perforce bring about the desired result in this direction. Here we may refer to the statement in the *Report of the fifteenth Provincial Educational Conference* of 1923.

> 'It is one of the fundamental principles of pedagogy that the History and Geography to be taught to the young should start with and be based on the study of the History and Geography of the district or region in which the pupil lives and be correlated to his actual daily experience.'

It is the study of the History of our ancient times and ancient rulers that should rouse in our youths a feeling of reverence and esteem for our ancient rulers and their works and institutions.

Our youths, nay our countrymen and countrywomen too, seem to be under the impression that our land, unlike others, cannot boast of a history from the records of our rulers and historians. This is perhaps due to the fact that books on the history of our land put into their hands are those containing materials culled by foreigners. Here we may point out the fact that in our country historical facts and events of ancient days and

ancient rulers have been carefully preserved *imperishably* and *unalterably* in Epigraphical records on temple walls, copper-plate grants and so on.

Our present Government have collected and published in the *Gazetteers* of the districts and the *Reports of the Epigraphical* and *Archæological departments* a good deal of valuable historical information relating to each district, especially of ancient days and ancient rulers. From out of the facts based on these research works, a series of booklets containing summaries of historical events and other particulars of the various districts, is issued in vernaculars, for the use of our school-going boys and girls and this volume is one of them.

The plan adopted in compiling these booklets is that of giving particulars relating to the situation, people etc., of each district in the general introduction, the political history proper from the beginning up to the occupation by the British in chapter I, and the Gazetteer relating to the historically important places in chapter II. In the case of the Madras district alone, the history relating to the acquisition by the English of the various parts of the presidency is given in the introduction, the history of the city together with the founding of Fort St. George in chapter I, and the various institutions useful to the people, maintained by government and by private bodies in chapter II.

June 23, 1924 P. V. JAGADISA AYYAR

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | பூர்வபீடிகை | 1 |
| I. | தேச சரித்திரம் | 17 |
| II. | முக்கிய இடங்கள் | 36 |

# திரிச்சிராப்பள்ளி ஜில்லா

## பூர்வபீடிகை

(அமைப்பு முதலிய விவரங்கள்).

திரிச்சிராப்பள்ளி ஜில்லா (படம் 1) சென்னை ராஜதானியின் தெற்கில் நாலு பக்கங்களிலும் நிலம் சூழ்ந்துள்ள ஜில்லா. இதன் வடக்கெல்லை சேலம், தென் ஆற்காடு ஜில்லாக்கள்; மேற்கெல்லை கோயமுத்தூர், மதுரை ஜில்லாக்கள். இதற்குத் தெற்கிலும் கிழக்கிலும் புதுக்கோட்டை ராஜ்ஜியமும் தஞ்சாவூர் ஜில்லாவும் இருக்கின்றன.

இந்த ஜில்லாவிற்கு இதன் பிரதான பட்டணமாகிய திருச்சினுப்பள்ளி என்ற ஊரிலிருந்து மேற்கூறியுள்ள பெயர் ஏற்பட்டுளது. இதன் சரியான பெயர் திரிச்சிராப்பள்ளி எனக் கூறுகிறார்கள். ஏனெனில் இப் பதம் மூன்று தலையன் ஊர் எனப் பொருள்படும். ஒரு சமயத்தில் இப்பிராந்தியத்தில் மூன்று தலையுள்ள திரிசிரன் என்ற ஒரு அரக்கன் இருந்துகொண்டு எல்லோரையும் பிடித்து வந்தனன். அவ்வரக்கனும் லங்காதிபதியாகவிருந்த ராவணனது சகோதரனேயெனவும் சிலர் கூறுகிறார்கள். அவன் மஹா சிவபக்தன். ஒரு நாள் தான் விரும்பியபடி பரமசிவன் பிரத்தியக்ஷமாகாததால் கோபம்கொண்டு தன திரண்டு தலைகளை அறுத்துக் கொள்ளப் பரமசிவனும் அவன்மீது கருணைகொண்டு பிரத்தியக்ஷமானார் என்ற ஓர் புராணக் கதையுமுளது. அப்

படிப் பிரத்தியக்ஷமான சிவபிரான் அவ் வரக்கனது வேண்டு கோளுக்கிணங்கி அப் பிராந்தியங்கள் அவனது பெயரை ஒட்டித் திரிசிராப்பள்ளியென வழங்கும்படி அனுக்கிரகம் செய்தனராம். சிலர் இவ்வூரிலிருக்கும் பெரிய பாறையி லிருந்து இதற்குத் திருசிலைப்பள்ளி அதாவது பரிசுத்தமான பாறையுடன் கூடிய ஊர் என்ற பெயர் வந்திருக்கவேண்டு மென்ற அபிப்பிராயம் பூண்டுளார். திருச்சின்னப்பள்ளி, அதாவது அழகிய அல்லது பரிசுத்தமான சிறிய ஊர் என்ற பெயரும் இவ்வூருக்குப் பொருந்துமெனக் கூறப்பட்டுளது. இந்தத் திரிச்சிராப்பள்ளி ஜில்லா இப்போது ஏழு தாலூக் காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

(1) திரிச்சிராப்பள்ளி.
(2) குளித்தலை.
(3) கரூர்.
(4) முசிரி.
(5) லால்குடி.
(6) பெரம்பலூர்.
(7) உடையார் பாளையம்.

இந்த ஜில்லா 4,319 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. இதிலடங்கிய கிராமங்கள் 1,004. ஜனத்தொகை 19,02,838.

இந்த ஜில்லாவிற்கு இயற்கைப் பிரிவுகள் தெளிவாய் ஏற் பட்டிருக்கவில்லை. இரண்டு சிறிய குன்றுகளின் தொடர்கள் இதன் வடக்குப்பக்கத்தின் மத்தியில் ஆரம்பித்துப் பெரம்ப- லூர், முசிரி தாலூக்காக்களின் சில பாகங்களின் வழியாகச் சென்றிருக்கின்றன. மேற்கூறிய குன்றுகளின் பெயர் பச்- சைமலை, கொல்லிமலை எனப்படும். தெற்கிலும் தென்மேற்கி லும் இப்பிராந்தியம் பாறைமேடுகளால் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.



பச்சைமலை என்ற குன்றுகள் கொஞ்சம் பெரம்பலூர் முசிரித் தாலூக்காக்களிலும், கொஞ்சம் சேலம் ஜில்லாவில் ஆத்தூர்த் தாலூக்காவிலும் இருக்கின்றன. தெற்கு வடக்கில் அதன் அதிகமான நீளம் சுமார் 20 மைல், விஸ்தீரணம் 177 சதுர மைல். அதில் 105 சதுரமைல் இந்த ஜில்லாவி லும், 72 சதுரமைல் சேலம் ஜில்லாவிலும் இருக்கின்றன. எங்குமே அது 2,000 அடிக்குமேல் உயர்ந்திருக்கவில்லை. ஆனால் இரண்டொரு சிகரங்கள் சமுத்திர மட்டத்திற்கு மேல் 3,400 அடி உயரம் வாய்ந்திருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது.

பச்சை மலைக்கு மேற்குப் பக்கமாக அதிலிருந்து ஒரு அகலமான பள்ளத்தாக்கினால் பிரிக்கப்பட்டிருக்கிறது கொ ல்லிமலை. அதன் மேற்கு தெற்கு கிழக்குப் பக்கங்கள் சமவெளிப் பிராந்தியங்களிலிருந்து நெடென்று கிளம்பி யிருக்கக் காணலாம். ஆனால் வடக்குப்பக்கமோ, சமவெளிப் பக்கமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சரிந்திருக்கிறது. இதன் விஸ்தீரணம் 192 சதுர மைல். இதில் 105 சதுர மைல் சேலம் ஜில்லாவிலுள்ள நாமக்கல் தாலூக்காவிலும், பாக்கி ஆத்தூர் தாலுக்காவிலும் இருக்கிறது. இதற்குச் "சதுரகிரி" என்ற பெயரும் உண்டு. இதன் உன்னதமான சிகரம் சமுத் திர மட்டத்திற்குமேல் 4,363 அடி உயரமுள்ளது, சேலூர் நாடெனக் கூறப்படும். அதன் தென்மேற்குச் சிகரம் 4,200 அடி உயரம் வாய்ந்துள்ளது. சராசரியில் இதன் உயரம் 3,500 அடி. கிழக்கு வடக்குப் பக்கங்களின் ஜலம் துறையூர்ப் பள்ளத்தாக்கிலும் பெரியாற்றுப் பள்ளத்தாக்கிலும் பாய்ந் தோடுகிறது.

திரிச்சிராப்பள்ளி ஜில்லாவின் நதிகளுள் காவேரியும், அதன் கிளையாகிய கொள்ளிடமும் முக்கியமானவை.

காவேரி மேற்குத் தொடர்ச்சி மலையில் குடகில் உற்பத்தியாகிக் கிழக்குப் பக்கமாக மைசூர் ராஜ்ஜியத்தின் வழியாக ஓடி, சேலத்திற்கும் கோயம்புத்தூருக்கு மிடையில் வெகு தூரம்வரை அந்த ஜில்லாக்களின் எல்லையாக ஏற்பட்டுப் பிறகு இந்த ஜில்லாவின் வடமேற்கு மூலையில் இதனுள் பிரவேசிக்கிறது. கரூர்த் தாலூக்காக்கிடையில் தென்கிழக்காகக் கொஞ்சதூரம் ஓடிப் பிறகு அது நேராக இந்த ஜில்லாவின் மத்தியிலேயே செல்ல ஆரம்பிக்கிறது. அப்பொழுது அது கிழமேற்காக ஓடி ஜில்லாவை இரு சம பாகங்களாகப் பிரிப்பதுடன் திரிச்சிராப்பள்ளிக்கு மேற்கில் ஒன்பது மைல் தூரத்தில் இரு பிரிவாக ஏற்பட்டு வடபுறமோடுவது கொள்ளிடமென்றும் தென்புறத்தியது பழைய காவேரியென்றும் வழங்குவதுடன் மத்தியில் ஸ்ரீரங்கத்தைத் உடைத்தாயிருக்கிறது.

காவேரி நதிக்கு அப் பெயர் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் தெளிவாக ஏற்பட்டிருக்கவில்லை. ஸ்காந்த புராணத்தில் ஒரு கதை ஏற்பட்டுள்ளது. ஒரு சமயம் பிரஹ்மாவுக்கு ஒரு புத்திரி யிருந்தனள். அவளை அவர் காவேர முனி என்ற மானிட முனியின் பெண்ணாக விருக்க அனுமதி கொடுக்க அவளும் அவ்வாறே இருந்துவந்தனள். தனது ஸ்வீகார பிதாவைப் புனிதமாக்க அவள் ஒரு நதியாக மாறிக் காவேரி யென்ற பெயரை அடைந்தனளாம். அகத்தியர் வைத்திருந்த கமண்டலத்தின் மீது விநாயகர் காக ரூபமாக ஏறிக் கவிட்க, அதிலிருந்து ஓடிய ஜலம் காவேரி யென்று பெயர் பெற்றதென்றும் கூறுகிறார்கள்.

காவிரி நதியின் உற்பத்தியைப்பற்றி பெரிய புராணத்தில் தெரிவித்திருப்பதாவது:—



ஆதிமா தவமுனி அகத்தியன் றரும்
பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி
மாதுமண் மடந்தைபொன் மார்பிற் றாழ்ந்ததோர்
ஓதநீர் நித்திலத் தாம மொக்குமால்.

**கோள்ளிடம்**—காவேரி நதியில் அதிகமான வெள்ளம் ஏற்பட்டால் அதை இந் நதி கொண்டுசெல்லு மாதலால் கொள் இடம் என இதற்குப் பெயர் வந்திருக்கலாம்.

**அமராவதி** நதி, ஆனைமலை, திருவாங்கூர்க் குன்றுகளின் தென்கிழக்கில் ஏற்படும்காட்டாறுகள் சேர்ந்து ஏற்படுகிறது. மேற்கூறிய குன்றுகள் மேற்குத்தொடர்ச்சி மலையைச் சேர்ந்தவைகளே. கோயம்புத்தூர் ஜில்லாவில் வடகிழக்கே ஓடிய பிறகு அது கரூர்த் தாலூக்காவில் பிரவேசித்து அதன் குறுக்காக ஓடி அதன் எல்லையோரத்தில் காவேரியில் சங்கமமாகின்றது. இதன் நீளம் 140 மைல். இதன் கரையிலுள்ள ஊர்களில் முக்கியமானது கரூர். இந்த ஜில்லாவிலுள்ள இதன் ஒரே உபநதி 'நங்காஞ்சி' என்ற நதி. அது மதுரைப் பழனிமலைகளில் உற்பத்தியாகிக் கரூர்த்தாலூக்காவின் தெற்கு எல்லைக்கு சமீபத்தில் அதில் வந்து விழுகிறது. இது விவசாயத்திற்கு முக்கியமான நதி. இதைக் கடக்க ஒரு ஸ்திரமான அணைக்கட்டும், சில நிச்சயமாகக் கூறமுடியாத அணைக்கட்டுகளும், அநேகம் கொரம்புகள் என்ற மண், செடி முதலியவைகளால் ஆன அணைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந் நதி கொண்டுவரும் வண்டல் மண் மிகவும் சிறந்தது.

**அய்யாறு** என்ற நதி கொல்லிமலையையும் பச்சைமலையையும் பிரிக்கும் இடைவெளிப் பிராந்தியத்தில் உற்பத்தியாகி மேற்கூறிய இரு மலைகளிலிருந்தும் அனேகம் உபநதிகளைப்பெற்றுக் கடைசியாகக் காவேரி நதியில் ஸ்ரீரங்கம்

நீலிற்கருகில் முசிரித் தாலூக்காவில் சுமார் 30 மைல் ஓடிய பிறகு சங்கமமாகிறது. இதன் உபநதிகளுள் முக்கியமானது 'தாளிகை' என்ற நதி. இந்த ஜில்லாவின் இதர நதிகளைப்போ லிராமல் இது பச்சைமலைச் சரிவுகளிலிருந்து தென்மேற் குப் பருவக்காற்றுக் காலத்தில் ஏராளமான ஜலத்தைப் பெறுகிறது. இதன் ஜலம் விவசாயத்திற்கு அதிகமாக உப யோகப்படுகிறது. இதைக் கடக்க. அதிக ஸ்திரமானவைக ளென நினைக்கமுடியாத அனேகம் கரைகள் (அணைக்கட்டு கள்) ஏற்பட்டிருக்கின்றன.

உப்பாறு என்ற கரைக்கோட்டான் ஆறு:— இது ஒரு சிறிய நதி. இது கொல்லிமலையில் உற்பத்தியாகிறது. முசிரித் தாலூக்கா வழியாகக் கொஞ்சதூரம் ஓடியபிறகு இது காவே ரியில்போய் விழுகிறது. இதன் பெயரே 'எல்லையைக் குறித்த நதி,' யென்று பொருள்படும். ஒருகாலத்தில் இந்நதி சேர ராஜ் ஜியத்திற்கும் பாண்டிய ராஜ்ஜியத்திற்கும் சோழ ராஜ்ஜி யத்திற்கும், இடையில் எல்லையாக ஏற்பட்டிருந்ததாம். காவேரிநதிக்கப்பால் குளித்தலைத் தாலூக்காவின் குறுக் காகத் தெற்குநோக்கி ஒரு கரை ஏற்பட்டிருக்கக் காணலாம். இது மேற்கூறிய எல்லையைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட் டிருந்த எல்லைக்கரையே போலும்.

கோட்டைக் கரையைப்பற்றிக் கம்பர் கூறுவதாவது:—

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

இந்த ஜில்லாவின் மற்ற நதிகளைப்போலவே இக் கரைக் கோட்டாறு என்ற ஆறும் வடகீழ்ப் பருவக்காற்று வீசு கையில்தான் பிரவாகத்தைப் பெறுகிறது. இந்நதிகள் சாதா



ரணமாய் அக்டோபர் மாதத்தில் ஒருதரம்தான் வெள்ளங் கொண்டு ஓடுவது வழக்கம். பிந்தி அம்மாதத்தில் ஏற்படும் பிரவாஹம் பற்பல தடவைகளில் கொஞ்சம் கொஞ்சம்தான் வரும். கரைக்கோட்டாறு விவசாயத்திற்குமிக்க உபயோ கப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் குறுக்காகப் பாதி ஸ்திர மானவைகளெனக் கொள்ளக்கூடிய எட்டு அணைகள் ஏற் பட்டிருக்கின்றன.

மாமுண்டியாறு:—இது முன் கூறப்பட்டிருக்கும் குளித்தலைத் தாலூக்காவில் சிதறண்டு ஏற்பட்டிருக்கும் குன்றுகளில் உற்பத்தியாகி அந்தத் தாலூக்காவின் வழியா கத் தென்கிழக்காக ஓடித் திரிச்சிராப்பள்ளிக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள காவேரிநதியிலிருந்து ஏற்பட்டிருக்கும் உய் யக்கொண்டான் கால்வாய் என்ற பாய்ச்சற் கால்வாயில் விழுகிறது.

நந்தியாறு:—இது பெரம்பலூருக் கருகில் உற்பத்தியா கும் ஒரு சிறிய நதி. அங்கே இது கொண்டக்காரன் பள்ளம் என்ற பெயர் வாய்ந்துள்ளது. இது திரிச்சிராப்பள்ளித் தாலூக்காவில் தென்கிழக்காக ஓடிக் கொள்ளிடநதியில் விழு கிறது. இதன் ஜலம் மூன்று அணைகள் கட்டித் தடுத்துக் கொண்டு போகப்பட்டுச் சாகுபடி செய்ய உபயோகப்படுத் திக்கொள்ளப்பட்டு வருகிறது. சுண்ணாம்பு நிலத்தின் வழி யாக ஓடிவரும் காரணம்பற்றி விவசாயத்திற்கு இந்த ஜலம் அவ்வளவு விசேஷமானதாகக் கூறமுடியாது. பெரம்- பலூர்த் தாலூக்காவில் ஊட்டத்தூர் என்னுமிடத்தில் இந்நதி பரிசுத்தம் வாய்ந்த புண்ணிய தீர்த்தமெனக் கருதப்பட்டுள் ளது. காவேரிநதியின் சில பாகங்களில் ஜனங்கள் இறந்து போனவர்களது எலும்புகளைப் போட வழக்கப்பட்டிருப் பதுபோல் இந்நதியில் இவ்விடத்திலும் போடுகிறார்கள்.

இந்நதி புண்ணிய நதி யெனக் கொள்ள ஏற்பட்டுள்ள ஒரு சம்பவக் கதையுமுளது: ஜனங்கள், இறந்துபோன தங்கள் பந்துக்கள் முதலானோர்களது எலும்புகளைக் காசிக்குக் கொண்டுபோய்க்கங்காநதியில்போடுவது வழக்கம். அப்படிச் செய்ய ஒருக்கால் ஓர் அந்தணன் தனது பந்து ஒருவரது எலும்புகளுடன் சென்றுகொண்டிருக்கையில் இவ்விடத்தில் ஓரிரவு தங்கிப்போகநேர்ந்தது. விடிந்ததும் பார்க்கையில் தான் கொண்டுவந்திருந்த எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு லிங்கமா யிருக்கக்கண்ட அவ் வேதியன் ஆச்சரியமுற்றபோதிலும் அத்துடன் காசிக்குப்போய் கங்கையில் அதைப் போடுவதே சரி யென்ற தீர்மானத்துடன் சென்றனன். கொஞ்சதூரம் சென்றதும் லிங்காகிருதியாக விருந்த எலும்புகள் முன்னிருந்தவாறே தனித்தனி எலும்புகளாக விழுந்துவிட்டன. இச் சம்பவத்தினால் நந்தியாறு கங்கை நதியைவிட அதிக மஹிமை வாய்ந்ததென அறிந்து அவ் விஷயத்தை மற்றவர்களுக்கும் தெரிவித்தனன்.

ஊட்டத்தூர் சிவன் கோவிலிலுள்ள நந்தியின் வாயின் வழி யாக இந்நதி ஆரம்பத்தில் வந்துகொண்டிருந்ததென்றும் சொல்லுகிறார்கள். ஒரு சமயம் கங்கை, யமுனை, ஸரஸ்வதி யென்ற மூன்று நதிகளும் தங்களுள் யார் சிரேஷ்டம் என்ற விஷயத்தைத் தீர்மானிக்க மேற்கூறியுள்ள ஊட்டத்தூருக்கு வந்தார்களாம். அங்கவர்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்ததைக் கண்ட நந்திதேவர் அவர்களை விழுங்கிப் பிறகு வெளிவிட்டனராம். அப்படி அவர் வெளிவிட்ட தீர்த்தமே நந்தியாறாக ஏற்பட்டதென்ற கதையும் ஒன்றுளது.

மேற்கூறியுள்ள நதிகளைத் தவிர வடவெள்ளாறு, தென் வெள்ளாறு என்ற இரண்டு நதிகளும் திரிச்சிராப்பள்ளி



ஜில்லாவில் ஓடுகின்றன. வடவெள்ளாறு வெகு தூரம்வரை தென்னாற்காடு ஜில்லாவிற்கும் இந்த ஜில்லாவிற்கு மிடையில் எல்லையாகவும் ஏற்பட்டு ஓடுகிறது. இது சேலம் ஜில்லாவில் உற்பத்தியாகி 135 மைல் ஓடியபிறகு பரங்கிப்பேட்டைக் கருகில் சமுத்திரசங்கம மாகிறது. பெரம்பலூர், உடையார்பாளையம் தாலூக்காக்களின் வட பாகத்திய ஜலம் காட்டு நதிகளாக ஏற்பட்டு இதில் வந்து கலக்கிறது. தென் வெள்ளாறு, மதுரை எல்லையில் குளித்தலை தாலூக்காவின் தெற்கிலுள்ள குன்றுகளில் உற்பத்தியாகிறது. இது திரும்பிப் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிரவேசித்துத் தென்மேற்குத் திக்கில் ஓடுகிறது. பிறகு அது அங்கிருந்து சிவகங்கை, ராமநாதபுரம் ஜமீன்தாரிகளின் வழியாக ஓடி சமுத்திரத்தில் சங்கமமாகிறது. இது சோழராஜ்ஜியத்தின் தெற்கெல்லையாக ஏற்பட்டு, அதைப் பாண்டியனது நாட்டினின்றும் பிரித்திருந்ததாகத் தெரியவருகிறது. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஒருகாலத்தில் தங்கள் ஸ்திரீகளை இந் நதியைக் கடக்க விடுவதில்லையாம். ஏனெனில் அவர்கள் அப்படிச் செய்தலால் கெடுதியை விளைக்குமென்ற பயம் அவர்களுக்கேற்பட்டிருந்தது.

உய்யக்கொண்டான் வாய்க்கால்:—திரிச்சிராப்பள்ளியின் கீழ்க்கோடியில் ஆரூர் தஞ்சாவூர் ரஸ்தாவில் ஒருவன் சென்றால் ஒரு அணை தென்படும். ஒரு சிறிய கோட்டையால் சூழப்பட்டுள்ள தஞ்சாவூரில் சிவகங்கை என்ற குளத்திற்கு ஒருகாலத்தில் ஜலம் வந்துகொண்டிருந்த கால்வாய் போய்க்கொண்டிருந்த வழியாம் இது. இதற்குக் கூடார்த்தம் ஒன்றிருப்பதுடன் இது வளைந்து வளைந்து ஏற்பட்டிருத்தல் ஒரு பாம்பு ஓடிக்காட்டிய வழிபோலிருக்கும்.

தஞ்சாவூர் அரசனாகிய சோழன் தனது பிரஜைகள் தண்ணீரின்றி வருந்துவதைப் பார்க்கச் சகியாது

அம்மனைத் துதிக்க அவள் அவனுக்குக் கனவில் தோன்றி, "ஒரு பாம்பு தென்பட்டு அது தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டுச் சென்று அகண்ட காவேரியை அடையும். அது சென்ற வழியாக வாய்க்கால் வெட்டினால் காரியசித்தியாகு"மெனக் கூறி மறைந்தாள். அரசன் கனவு கண்டவாறே ஒரு ஸர்ப்பம் தோன்றி வழிகாட்டியபடி வாய்க்கால் வெட்டி அகண்ட காவேரியிலிருந்து ஜலம் கொண்டுவரப்பட்டது. பாம்பு சென்ற வழியே வாய்க்கால் வெட்டிக்கொண்டு செல்கையில் குளித்தலைத் தாலூக்காவில் மருதூர் என்ற இடத்திற்கருகில் அப் பாம்பு மறைந்துபோக, அவ்விடமே உய்யக்கொண்டான் வாய்க்காலின் இப்பொழுது அக்காலத்திய தலைப்பாக ஏற்பட்டதாம். மேற்கூறிய வாய்க்கால் 14 மைல் உய்யக்கொண்டான் திருமலை என்ற விடம் வரைக்கும் வந்ததும் மலை தடங்கலாக ஏற்பட ஜலமெல்லாம் மறைந்துபோக அரசன் கடவுளைப் பிரார்த்தித்ததும் அவனது காரியம் சித்தியாயிற்றாம். பேட்டவாய்த்தலைக் கோவிலிலுள்ள ஸ்தல புராணத்தில் இந்த உய்யக்கொண்டான் கால்வாயைப்பற்றிக் கூறப்பட்டுளதாம். "ஸர்ப்ப நதி"யென்று பெயரிடப்பட்டிருந்த இதன் வயது ஆயிரம் வருஷமென்றும், அது படிப்படியாக முதலில் வாலினது கோடியிலிருந்து வால் வரைக்கும் மறைந்துபோகுமென்றும், பிறகு உடல்வரைக்கும், அதன் பிறகு தலைவரைக்கும் மறைந்துபோகுமென்றும் கூறிவந்தனர். அவ்வாறே அது இப்பொழுது தஞ்சாவூரிலிருந்து திரிச்சிராப்பள்ளிவரை மறைந்துபோயிருக்கிறதாம்.

இந்த உய்யக்கொண்டான் கால்வாயின் தலை மதகு பேட்டவாய்த்தலையில் ஏற்பட்டிருக்கிறது. அதன் கட்டிடம் அரசி மங்கம்மாள் கட்டிவைத்த மதகெனை அழைக்கப்பட்டுளது. இம் மதகின் வலது பக்கத்துச் சுவரில் ஒரு பாம்பு தங்கியும் வளைந்து வளைந்தும் செல்வதுபோலக்



கட்டிடம் ஏற்பட்டிருக்கிறது. இக் கால்வாய் ஓடுவதும், ஒரு பாம்பு தங்கியும் வளைந்து வளைந்தும் ஓடுவதைப் போலவே ஏற்பட்டுளது. பேட்டைவாய்த்தலை உய்யக்கொண்டான் என்ற பதங்களிலிருந்து பேட்டை என்றால் இடம், வாய் என்றால் வாய்க்கால், தலை என்றால் தலைப்பு என ஏற்படுகிறது. ஆதலின் இப்பெயருக்கு வாய்க்கால் தலைப்பு ஆரம்பிக்குமிடம் என்று பொருள். உய்யக்கொண்டான். என்றால் தவறாமல் குடித்தான் என்று பொருள் மேற்கூறிய கால்வாயின் ஜலம் உய்யக்கொண்டான் திருமலையால் குடிபட்டதிலிருந்து ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்த ஜில்லாவின் சீதோஷ்ண நிலைமை திரிச்சிராப்பள்ளி நகரிலுள்ளதிலிருந்தேதான் குறிக்கப்பட்டிருக்கிறது. சராசரி எடுத்துப் பார்க்கப்படுங்கால் இந்த ராஜதானியிலேயே அதிக உஷ்ணம் வாய்ந்ததாக ஏற்படும் ஜில்லா திரிச்சிராப்பள்ளி ஜில்லாவே என்று ஏற்படுகிறது. திருநெல்வேலி, கடப்பை, நெல்லூர் ஜில்லாக்கள் இதைவிடக் கொஞ்சம் அதிகம் உஷ்ணம் வாய்ந்த ஜில்லாக்களாம். அப்படியிருக்க திரிச்சிராப்பள்ளி ஜில்லாவின் சீதோஷ்ண நிலை ஒன்பது மாதம் உஷ்ணமானது, மூன்றுமாதம் அதிக உஷ்ணமானது என்று கூறப்பட்டுள்ளது. ஜூன்மாதத் துவக்கத்தில் இங்குச் சாதாரணமாகத் தென்மேற்குப் பருவக்காற்று வீச ஆரம்பிக்கிறது. நாட்டார் அதை மேல்காற்றெனப் பெயரிட்டு கூறுவார்கள். ஆகஸ்டுமாதம் முடிவுபெறும் வரை அது பலமாக வீசிக்கொண்டே யிருக்கும். மேற்குக் கரை மழையைப்பற்றிய இங்கு வழங்கும் பழமொழி, "ஆவணியில் இலை அசைந்தால் காவேரியில் ஜலம் வழிந்தோடும்" என்பதே. சென்ற 1924-ம் வருஷத்தில் உண்டான காவேரி வெள்ளத்தினால் சேதம் அதிகம்.

இந்த ஜில்லாவின் நிலங்கள் மூன்றுவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன: (1) வண்டல் நிலம், (2) கருமண்பூமி, (3) செம்மண்பூமி.

ஓர்விதப் பளிங்குபோன்ற சுண்ணும்புக்கல் இந்த ஜில்லாவில் ஐந்தாறிடங்களில் அகப்படுகிறது. கொல்லிமலைப் பாறைக் கும்பல்களில் இரும்புக்கனியு மிருக்கின்றது.

இந்த ஜில்லாவில் மிகச் சாதாரணமாகக் காணப்படும் மரங்கள், தென்னை, புளி இவைகளே. இவ் விரு மரங்களும் மற்ற இதர தாலூக்காக்களைவிடத் திரிச்சிராப்பள்ளித் தாலூக்காவிலேயே அதிகம். ஆனால் காவேரிநதிப் பள்ளத்தாக்கிலிருக்கும் குளித்தலை, முசிரித் தாலூக்காக்களிலும் அவை அதிகம். தஞ்சை ஜில்லா பட்டுக்கோட்டையைத் தவிர இந்த ஜில்லாவில் வேறெங்குமே மாமரங்கள் சிலாக்கியமானவை அல்ல. புதுக் கோட்டையில் காட்டுமரங்களைத் தவிர்த்து உயர்ந்த ஜாதி சாதாரண மாமரங்களு மிருக்கின்றன. பலா, கொய்யா, நாரத்தை மரங்கள் குன்றுகளில் அதிகம். புதுக்கோட்டையிலும் பலா மரங்கள் உண்டு. ஜில்லாவில் எங்குமே அங்கங்கு பனைமரங்களிருக்கக் காணலாம். ஆனால் அவ்வளவு ஜாஸ்தியாக இல்லை. இலுப்பைத் தோப்புகள் பொம்பலூரிலும், உடையார்பாளையத்திலும் உண்டு. மேற்கூறியுள்ள மரங்களைத் தவிர இந்த ஜில்லாவில் காணப்படும் மரங்கள் ஆலமரங்கள், இச்சி மரங்கள், வாத நாராயண மரம், பூவரசு முதலியன. இருபக்கங்களிலும் மரங்கள் வைத்துப் பயிராக்கப்பட்டுள்ள 673 மைல் ரஸ்தாக்கள் இந்த ஜில்லாவில் உண்டு. ரஸ்தாவின் ஓரங்களில் வைத்துப் பயிராக்கத் தகுந்த மரங்கள் புளியமரங்களைத் தவிர ஆலமரங்களே. சில இடங்களில் ஓரங்களில் தென்னைமரங்கள் வைத்துப் பயி



ரிடப்பட்டிருக்கும் ரஸ்தாக்களு மிருக்கின்றன. குளித்தலை, கரூர்த் தாலூக்காக்களிலும் புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலும் இச்சிமரமும் ரஸ்தாக்களின் ஓரங்களில் நட்டுப் பயிரிடப்பட்டிருக்கின்றன. வாதநாராயண மரம் நிழல்தரப் பயிராக்க யோக்கியமான மர மில்லை. அதற்கு உறுதியான வேருமில்லை. தவிரவும் வேண்டிய காலத்தில் அதன் இலை உதிர்ந்துபோகிறது. ஆயினும் பெரம்பலூர், முசிரித் தாலூக்காக்களில் இது ரஸ்தாவின் ஓரங்களில் பயிராக்கப்பட்டு இதன் இலை எருவாக உபயோகப்பட்டு வருகிறது. கருவ (கருவேலி) மரமும் பூவரசமரமும் கிராமங்களில் இங்குமங்கும் காணப்பட்டபோதிலும் பூவரசமரம் அதிகமாகக் காணப்படுவது திரிச்சிராப்பள்ளி, உடையார்பாளையம் தாலூக்கா, புதுக்கோட்டை ராஜ்யங்களிலேயே.

இந்த ஜில்லாவில் ஒன்பது வித மாடுகள் உண்டு. அவையாவன: (1) நாட்டுமாடு. (2) மொட்டை மாடு. இது பெரம்பலூர்த் தாலூக்காவில் மத்தூரில் விசேஷம், (3) திருவண்ணாமலை மாடு, (4) மதுரை ஜில்லாவிலிருந்து வந்துள்ள புலிக்குளம் மாடு, (5) கோயம்புத்தூர் ஜில்லாவில் காங்கயம் என்ற இடத்துக் காங்கயம் மாடு, (6) ஆலம்பாடி மாடு. இது கோயமுத்தூரி லிருந்தும், சேலம் ஜில்லா தர்மபுரியிலிருந்தும் வந்துள்ள ஓரே ஆலம்பாடி மாடென்று பெரியரிட்டழைக்கும் மாடு, (7) கோயமுத்தூர் ஜில்லா பங்கூர்மாடு. (8) நெல்லூர்மாடு, (9) புதுக்கோட்டைக் காட்டு மாடு முதலியன.

இங்கு காணப்படுவது ஒரே ஜாதி எருமைதான்; அது நாட்டு எருமையே. மற்ற ஜில்லாக்களில் காணப்படும் ஜாதி மாடே ஒழிய வேறில்லை. அவைகள் வியாபாரிகளால் கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களிலிருந்து கொண்டுவந்து இந்த

ஜில்லாவில் விற்கப்படுவதும் வழக்கம். ஆனால் அவைகளைச் சந்தைகளுக்குக் கொண்டுபோவதில்லை.

இந்த ஜில்லாவில் ஆடுகளும் வெள்ளாடுகளும் அதிகம். குரும்பாடு, வெள்ளாடு, சிவப்பு செம்மரிஆடு, வெள்ளைச் செம்மரிஆடு என்ற நான்கு ஜாதி ஆடுகளு மிருக்கின்றன. ஆடுமாடுகள் இந்த ஜில்லாவில் வேண்டியதற்குமேல் அதிகமாக ஏற்படுவதால் வெளி ஊர்களுக்கு அனுப்பப்பட்டுவருகின்றன. காட்டு மிருகங்கள், காட்டுப்பன்றி, காடி, சிறுத்தை முதலியன பச்சைமலை, கொல்லிமலைகளில் உண்டு.

திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில் பெரும்பான்மையோர் பேசும் பாஷை தமிழ். நூற்றில் பன்னிரண்டு பெயர்கள் தெலுங்கு பேசுகிறார்கள்; நூற்றில் இரண்டு பெயர்கள் கன்னடமும், ஒருவர் ஹிந்துஸ்தானியும் பேசுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

மொத்த ஜனத்தொகையில் நூற்றில் 93 பெயர்கள் ஹிந்துக்கள்! பாக்கி ஏழு பெயர்களில் நான்கு பெயர்கள் கிரிஸ்தவர்களென்றும், மூன்று பெயர்கள் முகம்மதியர்களென்றும் கூறலாம்.

சாதாரணமாய்க்கிராமங்களில் அகலம் வாய்ந்த தெருக்கள் ஏற்பட்டிருக்கக் காணலாம். பிராமணர்களது வஸதியும் பஞ்சமர்களது வஸதியும் தனித்தனியாகவே ஏற்பட்டிருக்கும். ஏழைகளது வீடுகள் கூரை வீடுகளே. மற்றவர்கள் ஓட்டுவில்லை வீடுகளிலாவது அல்லது மெத்தைவீடுகளிலாவது வசிப்பார்கள். ஒரு கூரைவீட்டின் கூறை புதிப்பிக்கப்பட்டால் ஒரு வைக்கோல் திரள் அக்கூரையில் சொருகி அதை மோட்டு (முகட்டு) நாச்சியாரெனப் பூசிக்கப்படும். அவ்வாறு செய்த கூறையை எலி முதலிய பிராணிகள்



சேதம் செய்யா வென்ற நம்பிக்கைகொண்டே யெனக் கூறலாம்!

இந்த ஜில்லாவின் முக்கியமான விளைபொருள் நெல். அனேக வகை நெல் பயிரிடப்பட்டு வருகிறது. வாழை, கரும்பு, மஞ்சள், வெற்றிலை முதலானவைகளும் அனேக விடங்களில் பயிர் செய்யப்படுகின்றன.

சாதாரணமாய் நெல் ஒரு போகமே பயிரிடப்படுவது இந்த ஜில்லாவில் சகஜமே. ஆயினும் சிற்சில நிலங்களில் இருபோக சாகுபடியும் ஆவதுண்டு. ஒரு போகம் பயிர் செய்யும் குடியானவர்கள் அது அறுவடையானதும் வயல்களில் எள்ளும் அவிரியும் பயிர் செய்துகொள்வதும் சகஜம்.

புஞ்சைப்பயிர் இரு வகைப்படும். மழையை எதிர் பார்த்து மணவாரி நிலங்களில் பயிரிடுவது ஒன்று. தோட்டக் கிணறுகளின் உதவிகொண்டு பயிர்செய்தல் மற்றொன்று. மணவாரிப் பயிரிடுங் காலங்கள் இரண்டு. "ஆடிப்பட்டம்" என்பது மேமாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பயிரிடுவது. "புரட்டாசிப் பட்டம்" என்பது செப்டம்பர் மாதம்முதல் நவம்பர்மாதம் வரை பயிரிடல். புரட்டாசிப் பட்டத்தில் அறுவடையாவது சாதாரணமாகக் கொள்ளே. இதுவும் வடகிழ்ப் பருவக்காற்று மழை நின்றுவிட்டால் பயிரிட முடியாது. கேழ்வரகு, சோளம், மிளகாய், கம்பு, வரகு முதலிய தானியங்களும் இந்த ஜில்லாவில் பயிரிடப்பட்டு அறுவடை யாவதுண்டு.

பயிரிட இந்த ஜில்லாவில் உபயோகமாகும் கருவிகள் மிகச் சாதாரணமானவைகளே. மரக்கலப்பை தான் உபயோகப்படுத்துகிறார்கள். இரும்புக்கலப்பை அனேகமாக இந்த ஜில்லாவில் தெரியவே தெரியாது.

விவசாயம் செய்யப்படும் நிலத்தில் நூற்றில் நாற்பத்தாறுபங்கு நதிக்கால்வாய்க்களின் ஜலத்தைக் கொண்டும் இருபத்தொரு பங்கு குளத்து நீரைக்கொண்டும் முப்பது பங்கு கிணறுகளின் உதவியைக்கொண்டும் ஆகிறது. விவசாயம் செய்வதுடன் நெசவுத்தொழில், நாடா நெய்தல், கம்பளங்கள் செய்தல், பாய் பின்னுதல், சாயம் போடுதல், தட்டுமுட்டுச் சாமான்கள் செய்தல், நகைகள் செய்தல், சித்திரம் வரைதல், கூடைமுடைதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய தொழில்களும் உண்டு.

தோல் பதனிடுதல், வாசனைத் திரவியங்கள் செய்தல், வளையல் செய்தல் முதலான பற்பல தொழில்களும் இந்த ஜில்லாவில் நடைபெற்று வருகின்றன.

காவேரி, கொள்ளிடம், அமராதி முதலிய நதிகளைக் கடக்கப் பாலங்கள் உண்டு. முந்திய நாட்களில நதிகளில் மிதக்கவிட்டுச் சாமான்கள் போக்குவாத்து நடத்தப்பட்டு வந்தது. இருப்புப்பாதை ஏற்பட்டதும் அந்த முறை நின்றுவிட்டது.

திரிச்சிராப்பள்ளியிலிருந்து ஈரோட்டுக்குப் போகும் இருப்புப்பாதை சிறிய இருப்புப்பாதை (Metre Gauge). தென் இந்தியா இருப்புப்பாதை இந்த ஜில்லாவிற்குள் கிழக்கிலிருந்து திரிச்சி ஜங்ஷனுக்குப் பதினன்குமைல் தூரத்தில் பிரவேசித்து அங்கிருந்து தென்மேற்கில் திரும்பி இந்த ஜில்லாவின் வழியாக 35 மைல் ஓடிப் பிறகு திண்டுகல், மதுரை முதலிய இடங்களுக்குச் செல்கிறது. திரிச்சிராப்பள்ளியில் தான் தென் இந்தியா இருப்புப்பாதையின் பிரதான ஆபீசு இருப்பது. இந்த ஜில்லாவில் இருப்புப்பாதைகளை அதிகரிக்கச்செய்ய யோஜனை நடந்துவருகிறது.

# அத்யாயம் 1.

## தேச சரித்திரம்.

திரிச்சிராப்பள்ளி ஜில்லாவின் பூர்வீக சரித்திரம் பெரும்பாலும் சோழர்களது சரித்திரமே. பூர்வீகத் தமிழ் நூல்களிலிருந்து ஏற்படுவதாவது சோழர்கள் இங்கு வருமுன் தற்காலத்திய கள்ளர், மறவர் முதலானோர்களது முன்னோர்களாகிய நாக வமிசத்தினரால் இந்த ஜில்லா ஆக்கிரமிக்கப் பட்டிருந்தது. சோழர்களும் அவர்கள் காலத்தில் தென் இந்தியாவில் ஆண்டுவந்த சேர பாண்டியர்களும் கீழ்வங்காள தேசத்திலிருந்து சமுத்திரமார்க்கமாய் வந்த ஆரியர்களல்லாத ஜாதியைச் சேர்ந்தவர்களே. இவர்களது முன்னோர்கள் பர்மா, கொச்சின் சீன, இலங்கை, தென் இந்தியா முதலான இடங்களிலிருந்து வந்தவர்கள். ஆராய்ச்சி செய்து பார்க்குமிடத்து முதல் முதல் நமக்கு நிச்சயமாக ஏற்படுவது இந்த ஜில்லாவின் பெரும்பாகம் சோழர்களது ஆதீனத்திலிருந்ததென்ற விஷயமே. சிற்சில காலங்கள் நீங்கலாக மற்றக் காலங்களில் பதினன்காம் நூற்றாண்டு வரையிலாவது இது அவர்களது ஸ்வாதீனத்திலிருந்து வந்ததெனக் கூறத் தடையில்லை. சிலர் பதினறுவது நூற்றாண்டுவரையில் அவர்களது ஸ்வாதீனத்தில் இந்த ஜில்லா இருந்திருந்ததெனக் கூறியுளர். திரிச்சிராப்பள்ளி மஜரா உறையூரிலும், கங்கைகொண்டசோழபுரத்திலும் பற்பல காலங்களில் அரசர்களது வாசஸ்தலங்கள் ஏற்பட்டிருந்தனவாம். இங் நாட்டில் அவர்களது ஆட்சியைக் குறிக்கும் அறிகுறிகள் அனேகம் ஏற்பட்டிருக்கக் காணலாம்.

கி. மு. 200வது நூற்றாண்டிலே கூட இங்கு சோழாதிபத்தியம் ஏற்பட்டிருந்ததென்ற விஷயம் மௌரிய வமிசத்தைச் சேர்ந்த பிரக்கியாதிபெற்ற அசோக சக்கரவர்த்தியினது ராஜ சாஸனத்தில் ஏற்பட்டுளது. அதில் பௌத்த மத விஜயம் தெற்கில் சோழ பாண்டியர்கள் வசித்த இடம்வரை அதாவது தாம்பிரபர்ணி வரை ஏற்பட்டிருந்ததாகக் கூறப்பட்டுளது. மேற்கூறியுள்ள காலத்திற்கு முந்தியேகூட அது ஏற்பட்டிருக்கினுமிருக்கலாமென்பது பலரது அபிப்பிராயம். இந்த ஜில்லா அசோக சக்கரவர்த்தியாலாவது மௌரியர்களுக்குப் பிந்தி வந்த ஆந்திரர்களாலாவது ஜெயிக்கப்பட்டிருக்கவில்லை. சோழர்கள் முதல்முதல் இலங்கையைக் கி. மு. 247வது வருஷத்தில் படையெடுத்திருந்ததாகக் கூறப்பட்டுள்ள விஷயம் நிச்சயமாய் நிர்ணயிக்கப்படவில்லை. தமிழ் நூல்களிலிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள விஷயம் சோழர்களது பிரதான நகரம் உறையூரென்றதும், ஆனால் அதைவிட முக்கியமானவிடம் அக்காலத்தில் பெரிய துறைமுகப்பட்டணமாக விளங்கிவந்த காவேரி நதியின் முகத்துவாரத்திலுள்ள காவேரிப்பட்டணம் என்றவிடம் சோழராச்சியத்தில் தஞ்சாவூர் திரிச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் அடங்கியிருந்தனவென்பதும் அந்தராச்சியம் வடக்கில் காஞ்சீபுரத்திற்கப்பாலும் பரவியிருந்ததென்பதுமே கூறப்பட்டுளது. அதன் தெற்கிலும், தென்மேற்கிலும் பாண்டிய சேரர்களது ராச்சியங்கள் இருந்தன. கம்பர் சேரநாட்டெல்லையைப்பற்றிப் பாடியதாவது.

"வடக்குத் திசை பழனி வான் கீழ் தென்காசி
குடக்குத் திசை கோழிக் கோடாம் கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முன்னெண்பதின் காதம்
சேரநாட் டெல்லை யெனச் செப்பு."



மேற்கூறியுள்ள மூன்று ராஜ்ஜியங்களின் எல்லைகள் நிச்சயமாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. சதா நேர்ந்துகொண்டிருந்த சண்டைகளினால் அவை மாறிக்கொண்டு வந்திருந்த காரணம்பற்றித்தான் அவை நிர்ணயித்துக் கூறப்படாதிருந்திருக்கவேண்டுமென நினைக்க இடம் தருகிறது. ஔவையார் அருளியிருக்கும் பாட்டிலிருந்து சோழராஜ்ஜியம் கிழக்கில் சமுத்திரக்கரைவரை பரவியிருந்ததென்றும், வடக்கில் கூட ஆருக்கருகில் சமுத்திர சங்கமமாகும் பெண்ணையாறு வரைக்கும் பரவியிருந்ததென்றும், தெற்கில் தஞ்சாவூர் ஜில்லாவின் தெற்கெல்லைக்கருகிலுள்ள வெள்ளாறுவரை பரவியிருந்ததென்றும், மேற்கில் கூடகிரி வரை பரவியிருந்ததென்றும் கூறப்பட்டுளது. கூடகிரி என்ற இடம் கோட்டகிரி என்றும், கோட்டைக்கரை என்றும் வழங்கிவந்திருப்பதிலிருந்து அது குளித்தலைத் தாலூக்காவில் இப்பொழுதும் அறிகுறியைவிட்டுப் போயிருக்கும் முந்தியகாலத்திலிருந்த கரையையே குறிக்கிறதென நினைக்க இடம்தருகிறது. கரைக்கோட்டன் ஆறு என்ற நதியும் மேற்கூறியுள்ளவாறு எல்லையை நிர்ணயிக்கும் ஒரு பாகமாக ஏற்பட்டிருந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

சேர அரசர்களிற் சிலர் சௌரியம் வாய்ந்திருந்தவர்களென்பதைக் குறிக்க அநேக சம்பவங்களை உதாரணங்களாக எடுத்துக்கூறலாம். அவர்களுள் ஒருவன் சோழ அரசன் ஒருவனுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கையில் முதுகில் காயப்பட்டதால் நேர்ந்த அவமானத்தைச் சகிக்கமாட்டாது பட்டினிகிடந்திறந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திய சேர சோழ பாண்டியர்கள் கட்டிடங்கள் கட்டுவதில் சாமர்த்தியம் வாய்ந்திருந்தவர்கள் என்றதுடன்,

விவசாய சம்பந்தமான அனேக வேலைகளையும் செய்து முடித்திருக்கின்றார்கள்.

சோழர்களது சரித்திரத்தில் முதல் முதல் தெளிவாக ஏற்பட்டிருக்கும் அரசன் கரிக்கால் சோழன். அவன் ஆண்ட காலம் கி. பி. 50முதல்95 வரை எனநிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவனுக்குக் கரிக்காலன் என்ற பெயர்வந்ததற்குக் காரணம், அவனை நெருப்பிட்டுக் கொளுத்திக் கொல்ல முயன்றது நிறைவேறாமல் கால்கள் மாத்திரம் கருக்கப்பட்டதேயெனக் கூறியுளர். அவன் பிறப்பதற்கு முன்னரே அவனது தந்தை இறந்துபோயிருந்ததனால் பிந்தி அவனுக்கு ராஜ்ஜியம் கிட்டுவதில் கஷ்டங்கள் ஏற்பட்டன. ஆரம்ப முதல் அவன் ஒரு வீரனேயெனக் கூறலாம். அவனது முதல் சண்டையில் வெண்ணில் (கோயில்வெண்ணி) சமவெளியுத்த பூமியில் அவன் ஒன்றுசேர்ந்து தன்னை எதிர்த்த பாண்டிய சேர சைனியங்களைத் தோற்கடித்தான். இந்த சந்தர்ப்பத்தில்தான் சேரராஜன் முதுகில் காயப்படுத்தப்பட்டு அச் சம்பவத்தினால் நேர்ந்த அவமானத்தைச் சகிக்கமாட்டாதவனாய்ப் பட்டினி கிடந்திறந்தான். இக்கரிக்கால் சோழன் பின்னர் நாக வமிசத்தினர்களுள் சில வகுப்பினர்களையும் குரும்பர்கள் என்ற ஆட்டிடைய வமிசத்திய அரசர்களுள் சிலரையும் வென்றிருந்தனன் என்று கூறப்பட்டுளது. இவனது புத்திரி சேர தேசத்திய அரசனை மணந்துகொண்டிருந்ததாகவும், இவனும் பாண்டியனும் சினேக சல்லாபம் செய்திருந்ததாகவும் கூறப்பட்டிருப்பதிலிருந்து இம்மூன்றரசர்களுக்குள்ளும் ஏற்பட்டிருந்த சம்பந்தம் ஏற்படுகிறது.

மேற்கூறிய கரிக்கால் சோழனுக்குப் பிறகு அவன் மகன் நலன்கிள்ளி என்றவன் பட்டத்திற்கு வந்து கி. பி.



105-வது வருஷம் வரை ஆண்டிருந்தான். எல்லா நாகரீகங்களும் வாய்ந்து நற்குணமும் பொருந்தியிருந்த இவ்வரச குமாரனுக்குப் பிரக்கியாதி பெறவேண்டுமென்ற அதிக ஆவலும் ஏற்பட்டிருந்தது. ஆதலால் இவன் தனக்கருகாமையிலிருந்த சேர, பாண்டியர்களுடன் சதா சண்டையிட்டுக்கொண்டேயிருந்தானும், இவன் பாண்டியநாட்டில் கோட்டை கொத்தளங்களால் பலப்படுத்தப்பட்டிருந்த ஏழிடங்களைப் பிடித்துக்கொண்டிருந்தது மட்டுமேயன்றி இவன் சாசுவதமாகத் தனது ராஜ்ஜியத்தை விஸ்தாரமாக்கிக்கொண்டிருந்ததாக ஏற்படவில்லை. இவனிடம் தற்புகழ்ச்சி குடிகொண்டிருந்ததென்பது இவன் செய்திருந்த பாட்டு ஒன்றில் தெரிகிறது. "பராக்கிரமம் வாய்ந்துள்ள எனது சௌரியத்தை அலக்ஷியம் செய்து எனது இஷ்டத்திற்கு விரோதமாக நடக்கப்புகும் மூடன் தூங்கிக்கொண்டிருக்கும் புலியின் மீது இடறிவிழுந்து அதை எழுப்பி அதன் கைகளிலிருந்து தப்பமுடியாமல் தவிக்கும் ஒருவனுக்கு ஒப்பாவான். நான் அத்தகையவர்களை யானை மூங்கில் குருத்தை முறிப்பதுபோல முறித்தெறிந்துவிடுவேன்" எனக் கூறியிருக்கிறான். இவனுக்குப் பிறகு காலக்கிரமத்தில் இவன் மகன் கிள்ளிவளவன் பட்டத்திற்கு வந்தான். அவனும் சேர பாண்டியர்களுடன் நேரிட்ட சண்டையில் வெற்றிபெற்று அவர்களிருவர் பிரதான நகரம் வரைக்கும் கூடச் சென்றிருந்தாலும் இக் கிள்ளிவளவனது முதல்தாரம் லங்கை அரசன் ஒருவனது புதல்வியாம். இவனுக்குப்பிறகு இவன் தம்பி பெருநற்கிள்ளி பட்டத்திற்கு வந்து கி. பி. 150வது வருஷம் வரைக்கும் ஆண்டிருக்கிறான். இவனது செயல்களைப்பற்றி ஏற்பட்டிருப்பதெல்லாம்கூடி இவன் ஒரு "ராஜசூய யாக"த்தைச் செய்து முடித்ததாகவும் அதற்

குச் சேர பாண்டிய அரசர்களை அழைத்திருந்ததாகவும் ஏற்பட்டிருத்தலே. மேற்கூறியுள்ளவர்களைத் தவிர்த்து இன்னும் இரண்டு சோழமன்னர்களது பெயர்கள் கவிகளால் கூறப்பட்டுச் சிலா லிகிதங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுள் கோச்செங்கண்ணன் என்றவன் அனேகம் சிவாலயங்களையும் விஷ்ணு ஆலயங்களையும் கட்டிவைத்ததாகக் கவிகளில் கூறப்பட்டுளது. கோக்கிள்ளி என்ற ஓ ரரசன் நாக ஜாதியார்களது அரச குமாரியை மணம் செய்துகொண்டு அவளிடம் தொண்டமான் இளந்திரையன் என்ற புதல்வனைப் பெற்ற, அவனுக்கு அரசனால் தென் ஆற்காடு, செங்கல்பட்டு,வட ஆற்காடு ஜில்லாக்கள் அடங்கியுள்ள தொண்டமண்டலம் என்ற நாடு அளிக்கப்பட்டதாம்.

பிறகு அனேக நூற்றாண்டுகள் வரைக்கும் சோழமன்னர்களது சரித்திரம் தெளிவாக ஏற்படவில்லை. கொஞ்சத் தெளிவாக ஏற்படுவதாவது அவர்கள் பல்லவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்த விஷயமே. இப் பல்லவர்கள் இரண்டாவது நூற்றாண்டில் இந்தியாவின் வடமேற்கிலிருந்து மத்திய இந்தியாவுக்கு வந்து, அடுத்த நூற்றாண்டின் முதல் பாதி கழியுமுன்னரே ஆந்திரர்களை ஜெயித்து ஆங்காங்கு சிதறுண்டிருந்த அவ் வமிசத் தாசர்களது நாடுகளையும் இன்னும் வேறு சில வமிசத்தவர்களது நாடுகளையும் கைக்கொண்டுவிட்டார்கள். பிறகு அவர்கள் அதி சீக்கிரத்திலேயே காஞ்சிபுரம் வந்துவிட்ட விஷயம் ஏற்பட்டுளது. முதலாவது மஹேந்திரவர்மன் பட்டத்திற்கு வருமுன்னரே, சோழர்கள் ஜெயிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் சிம்ஹவிஷ்ணுவென்ற மேற்கூறிய மஹேந்திரவர்மனது தகப்பனாராலும் மகன் முதலாவது நரசிம்ஹவர்மன் என்றவனாலும் சோழர்கள் அவர்களால் ஜெயிக்கப்பட்டதாகக் கூறி



யிருக்கிறார்கள். சோழர்கள் எந்தமட்டில் ஜெயிக்கப்பட்டிருந்தார்கள் என்றது தெளிவாக ஏற்பட்டிருக்கவில்லை. திரிச்சிராப்பள்ளிச் சிலா லிகிதங்களில் சோழர்களது பராக்கிரமம் கூறப்பட்டிருக்கிறது. இக்காலத்தில்தான் "பெரிய புராணத்"தில் கூறப்பட்டிருக்கும் சோழ பாண்டிய சம்பந்தம் ஏற்பட்டிருக்கவேண்டும். அதில் சோழ அரச குமாரி ஒருத்தி மங்கையர்க்கரசி பாண்டிய நாட்டு மன்னன் ஒருவனை மணந்து பக்தசிரேஷ்டராகிய சீயாழி திருஞானசம்பந்தரது உதவிகொண்டு அவரை ஜெயின மதத்தைக் கைவிட்டுச் சைவ மதத்தைக் கைக்கொள்ளும்படி செய்ததாகக் கூறப்பட்டுளது. தவிரவும் பல்லவர்கள் சோழர்களை மும்முறை ஜெயித்ததாகக் கூறப்பட்டிருத்தல் எதைக் குறிக்கும்? சோழர்கள் எளிதில் இணங்காமல் எதிரிகளாகிய பல்லவர்களை எதிர்த்துநின்றிருந்ததாக அது எடுத்துக் காட்டுகிறது.

பல்லவர்களுக்குப் பிறகு வந்த சாளுக்கியர்கள் பல்லவர்களை ஜெயித்தது மாத்திரமேயன்றிச் சோழர்களுக்கும் அனேக வருஷ காலம் சத்துருக்களாகவும் ஏற்பட்டிருந்தார்கள். அவர்கள் ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திடீரென்று, பம்பாய் ராஜதானியிலுள்ள பாதாமி என்ற விடத்தைப் பிரதான ராஜதானி நகரமாகக் கொண்ட மத்திய மேற்கு இந்தியப் பிராந்தியங்கள் அடங்கியுள்ள பெரிய ராஜ்ஜியத்திற்கு அதிபதிகளாக ஏற்பட்டுக் கிளம்பினார்கள். அவர்களது அரசன் இரண்டாவது புலிகேசியின் கீழ் அவர்கள் அதிசீக்கிரத்தில் தங்களது ராஜ்ஜியத்தைக் கிழக்குச் சமுத்திரத்தை எட்டியும் கோதாவரி ஜில்லாவின் உள்ளும் பரவும்படிசெய்து பல்லவர்களைக் காஞ்சிபுரத்தில் ஓடி ஒளிந்துகொள்ளும்படி செய்துவிட்டார்கள். பல்லவர்களையும்

சோழர்களையும் தாங்கள் ஜெயித்துவிட்டிருந்ததாகவும் தவிரவும் காவேரியாற்றைக் கடந்து சேரபாண்டிய நாடுகளைப் படையெடுத்திருந்ததாகவும் கூறி அவர்கள் பெருமை பாராட்டிக் கொண்டிருந்ததும் ஏற்பட்டுளது.

சீக்கிரத்தில் இச்சாளுக்கியர்களது பலமும் குன்றியது. அவர்களது தேசம் இரண்டு ராச்சியங்களாகப் பிரிவுபட நேர்ந்தது. பாதாமி என்ற இடத்தைப் பிரதான நகராகக் கொண்டிருந்ததுதான் மேற்கு சாளுக்கிய ராஜ்ஜியம். கிழக்கு சாளுக்கிய ராச்சியம் எல்லூருக் கருகிலுள்ள வேங்கி என்ற இடத்தைத் தலைமை நகராகக் கொண்டிருந்தது. கொஞ்ச காலத்திற்கெல்லாம் பாதாமி மேற்குச் சாளுக்கியர்களும் பலம் குன்றிப்போய்க் கன்னட நாட்டு ராஷ்டிரகூடர்கள் கிளம்பினார்கள், மேற்குச் சாளுக்கியநாட்டைக் கைக்கொண்டிருந்த ராஷ்டிரகூட அரசன் மூன்றாவது கிருஷ்ணன் காலத்தில் முதலாவது பாராந்தகச் சோழன் மகன் ராஜாதிச் சோழன் அவனுடன் போராட நேர்ந்து அரக்கோணத்திற் கருகிலுள்ள தக்கோலம் என்னுமிடத்தில் கி. பி. 949-ல் கொல்லுண்டான். ஜெயித்தவன் தொண்டமண்டலத்தைத் தவிர்த்து வேறெதையும் ஜெயித்திருந்ததாக ஏற்படவில்லை. ராஷ்டிரகூடர்கள் தொண்டமண்டலத்தை ஜெயித்திருந்தது அவர்களது சிலா லிகிதங்களிலிருந்து ஏற்படுகிறது. ஆனால் அவர்களது ஜெயம் நீடித்திருந்ததாகக் காணோம். சில வருஷங்களுக்கெல்லாமே இரண்டாவது ஆதித்தன் என்றவனால் நாடு திரும்பவும் பிடித்துக்கொள்ளப்பட்டது. ஆயினும் முன் சோழ மன்னர்களுக் கேற்பட்ட தோல்வி இப்பொழுது கொஞ்சகாலத்திற்கு முந்தி அடையப்பட்ட ராச்சியத்தில் குழப்பத்தை உண்டாக்கக் காரணமாயிற்று. முதலாவது ராஜராஜனது காலத்தில்தான்



V21192

இழந்துபோன ஒழுங்குதிரும்பவும் ராஜ்ஜியத்தில் ஏற்பட்டதெனக் கூறவேண்டும். அடுத்த அரசர்கள் ஐந்து பேர்கள். அவர்களது பெயர் கண்டராதித்தன், அரிஞயன், இரண்டாவது பாராந்தகன், ஆதித்த கரிக்காலன் அல்லது இரண்டாவது ஆதித்தன், மதுராந்தகன் எனக் கூறப்பட்டுளது. இரண்டாவது ஆதித்தன் இரண்டாவது பாராந்தகனது மகன். அரிஞயன் ராஜாதித்தனது சஹோதரன். மதுராந்தகன் கண்டராதித்தன் மகன். முதலாவது ராஜராஜன் காலத்தில் அரசாட்சி சீராக்கப்பட்ட விஷயம் முன்னரே கூறினோம். அவன் இரண்டாவது பாராந்தகனது கடைசிப் புதல்வன் அவனது ஆரம்பத்தியப் பட்டம் ராஜகேஸரி வர்மன். அவனுக்கு "ராஜராஜன்" என்ற பட்டம் சிதம்பரம் கோவில் அதிகாரிகளால் கொடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அவனது ஆட்சி ஒப்பற்ற ஐசுவரியத்திற்கு ஆரம்பமானதாக ஏற்பட்டு நடுவில் ஒரு நூற்றாண்டு நீங்கலாக மற்றக் காலங்களில் நீடித்திருந்த விஷயம் ஏற்பட்டுளது. அவனது ஆட்சி மேற்கில் கொல்லம், குடகுராஜ்ஜியம் வரை பரவியிருந்ததாகவும், இலங்கையிலிருந்து கன்னியாகுமரி வரை ஒரிஸ்ஸாவின் எல்லைவரை பரவியிருந்ததாகவும் அவனே கூறியுளன். அவனது விரிவான சரித்திரத்தை "ராஜராஜசோழ" னென்ற புத்தகத்தில் காணலாம். அவனுக்குப் பின்வந்தவர்கள் சோழ ஆதிபத்தியத்தைப் பர்மா, மலையாத் தீவுகள் முதலான இடங்களிலும்கூடப் பரவச்செய்தார்கள். அவனது ஆட்சியின் முதல் படையெழுச்சி சேரராஜ்ஜியத்திலிருந்த ஒரு துறைமுகப் பட்டினத்தை நோக்கி ஏற்பட்டது. அவன் அதைப் பிடித்துக்கொண்டு அழித்துவிட்டான். தவிரவும் அவன் மலையாள தேசத்தில் பாண்டிய சேரர்களை ஜெயித்து அவர்களது நாட்டைத் தன் கீழ்ப்படுத்திக் கொண்டதாகக் கூறியிருக்கிறான்.

148298

ராஜராஜனது குடும்பத்தவர்கள் அறுபது வருஷகாலம் சோழ ஆதிபத்தியம் வஹித்திருந்ததாகக் கூறப்பட்டுளது. அவனுக்குப்பின் வந்தவர்களும் சாதாரணமானவர்களாக இருக்கவில்லை. அவர்கள் அவர்களது முந்தியவர்கள் ஆண்டு வந்த நாட்டை விஸ்தரிக்கச் செய்தார்கள். ராஜராஜனுக்குப் பின் வந்தவன் அவனது மகன் ராஜேந்திர சோழன். அவனது வெற்றி சிலா லிகிதங்களில் பிரபலமாகக் கூறப்பட்டுளது. அவன் தனது ராஜ்ஜியத்தை கங்கை நதி வரை பரவச்செய்திருந்த காரணம்பற்றி அவனுக்கு "கங்கைகொண்ட சோழன்" என்ற பெயர் வந்ததாம். அப் பட்டம் இப்பொழுதும் உடையார்பாளையம் தாலூக்காவிலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் என்ற அவனது முந்திய பிரதான ஊரின்பேரில் ஸ்திரமாக ஏற்பட்டிருக்கிறது. அவனது ஆட்சி கஞ்சம் ஜில்லாவிலுள்ள மஹேந்திரகிரிவரை சென்றிருந்ததென்ற விஷயம் அம் மலையின்மீதேற்பட்டுள்ள லிகிதங்களிலிருந்து ஊர்ஜிதப்படுகிறது.

மேற்கூறிய ராஜேந்திர சோழன் 1053வது வருஷத்தில் இறந்தபிறகு அவன் காலத்திலேயே ராஜாவாக இருந்து வந்த அவனது மகன் முதலாவது ராஜேந்திர தேவன் என்றவன் சிம்ஹாஸனம் ஏறினான். அவன் பாண்டியர்களுடனும், சோர்களுடனும், சிங்கள தேசத்தவர்களுடனும் போர்புரிய நேர்ந்திருந்த விஷயம் கூறப்பட்டுளது. ஏனெனில் அவர்கள் சோழ அதிகாரத்தைக் குலைக்க ஒருங்கு கூடினார்கள். அவர்களால் ஏற்பட்ட கலகம் அடக்கப்பட்டது. சேரராஜன் ஒரு யானை மிதித்து மாண்டான். ராஜேந்திரதேவன், அவனுடன் யுவராஜாவாக இருந்துவந்த ராஜமஹேந்திரன் இவர்களுக்குப் பிறகு பராக்கிரமம் வாய்ந்த வீர ராஜேந்திர தேவன் என்றவன் பட்டத்திற்கு வந்தான். இவனும் சோ



பாண்டியர்கள்மீது வெற்றிபெற்றதுடன் கிழக்குச் சாளுக்கிய நாட்டையும் மறுபடியும் ஜெயித்து மேற்குச் சாளுக்கியர்களையும் ஒடுக்கினான். சேரபாண்டிர்கள்மீது போர் ஏற்பட்டதற்குக் காரணம் தெற்கில் ஏற்பட்ட கலகமே ஒழிய வேறில்லை. அனேக யுத்தங்களில் வெற்றிபெற்று ஜெயபேரிகையுடன் திரும்பிவந்த இவ்வரசனது பாதசேவையை மற்ற அரசர்கள் செய்ததாகக் கூறப்பட்டுளது. நவரத்நகசித ஆபரணங்களுடன் அதன் சிங்காதனத்தில் வீற்றிருக்க வேங்கி தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த ஐசுவரியங்கள் அவன் முன்பாக எல்லோருக்கும் காட்டப்பட அவர்கள் அவனையும் அவனது பெருமையையும் புகழ்ந்து போற்றினார்களாம். மேற்கூறிய வீரராஜேந்திர தேவன் இறந்ததும் சோழராச்சியம் சீர்குலைய ஆரம்பித்தது. ராஜேந்திர சோழனது பேரனும் ஸ்வீகாரப் புதல்வனுமான குலோத்துங்கன் சோழ ராஜ்யத்திற்குப் பாத்தியதையைக் கொண்டாட அவனுக்கும் மேற்குச் சாளுக்கிய ஆறுவது விக்கிரமாதித்தனுக்கும் பலத்த சண்டை நேர்ந்தது. அதில் குலோத்துங்கனே வெற்றி பெற்றனன். அவனது சிலா லிகிதங்கள் அவன் விக்கிரமாதித்தனைக் கோலாரிலிருந்து துங்கபத்திரைக்குத் துரத்திவிட்டதாகப் புகழ்ந்து கூறியிருக்கின்றன.

நமது கவனத்தைக் கவரக்கூடிய அடுத்த அரசன் முதலாவது குலோத்துங்கன். இவன் கிழக்குச் சாளுக்கிய அரசன் ராஜராஜனுக்கும் சோழமன்னன் ராஜேந்திரசோழனது புதல்வி அம்மங்கா தேவிக்கும் பிறந்தவன். பாலியத்திலேயே இவன் தனது தாய்ப் பாட்டனது அன்பைப் பெற்றுப் பிறகு அவரது ஸ்வீகாரப் புதல்வனான இவன் செய்த சீர்திருத்தங்களுள் முக்கியமானதும் இவனுக்கு

அதிகத் திருப்தியைக் கொடுத்ததுமானது உள்நாட்டுச் சுங்க வசூலை நிறுத்தியது. இச் சுங்கம் வியாபாரத்திற்குக் குந்தகமாக ஏற்பட்டிருந்ததால் இது எடுபட்டதும் வியாபாரம் விருத்தியடையக் காரணமாயிற்று. தவிரவும் இவன் நிலங்களைப் பரிசோதனை செய்து தீர்வை விஷயமாக மதிப்பிடவும் ஏற்பாடு செய்திருந்தான். அவனது ராஜதானி நகரம் கங்கைகொண்டசோழபுரமாக விருந்தாலும் காஞ்சீபுரமும் ஒரு முக்கியமான ஊராகவும் சிற்சில காலங்களில் அரசன் வசிக்கு மிடமாகவும் ஏற்பட்டிருந்தது. 1118-வது வருஷத்தில் இக் குலோத்துங்கன் தனது மகன் விக்கிரம சோழன் என்றவனை அவன் ராஜப்பிரதிநிதியாக இருந்து வந்த வேங்கியை விட்டுவந்து, யுவராஜாவாகத் தன்னுடனிருக்கும்படி செய்தான். அப்படிச் செய்த சில நாட்களுக்கெல்லாம் அவன் இறந்துபோக விக்கிரம சோழனே அவனது ஸ்தானத்தில் அரசனாக ஏற்பட்டான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழர்களது அதிகாரம் கொஞ்சங் கொஞ்சமாய் க்ஷீணிக்கத் தலைப்பட்டதெனக் கூறலாம். வட சர்க்காரில் அவர்களது அதிகாரம் பேருக்கு மாத்திரம் இருந்ததேயன்றி வேறில்லை. பாண்டியர்களும் அநேகமாகத் தங்களது முந்திய சுயேச்சையைத் திரும்பவும் பெற்றார்களெனக் கூறலாம். தவிரவும் தொண்டமண்டலத்திலிருந்த பற்பல அதிபதிகளும் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் மற்றவர்களுக்கு விரோதமாக உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளத் தலைப்பட்டார்கள். பெயருக்கு மாத்திரம் சோழ மன்னன் அவர்களது தலைமை அரசனாகக் கருதப்பட்டு வந்தானேயொழிய வேறில்லை.

மூன்றாவது ராஜராஜன் காலத்தில்தான் சோழ அதிகாரம் நசித்துப்போகும் நிலைமை வாய்ந்தது. மாரவர்மன்



முதலாவது சுந்தரபாண்டியன் என்ற பாண்டிய நாட்டரசன் தான் உறையூரையும் தஞ்சாவூரையும் தீயிட்டுக்கொளுத்திச் சோழ ராஜ்ஜியத்தை ஜெயித்துத் திரும்பவும் அதைச் சோழ மன்னனுக்குக் கொடையாக அளித்துவிட்டதாகப் பெருமை பேசியிருக்கிறான். இவ் விஷயம் அவனது தஞ்சாவூர்த் தாலூக்கா திருக்காட்டுப்பள்ளியிலும், ஸ்ரீரங்கத்திலும் ஏற்பட்டுள்ள சிலா லிகிதங்களால் ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது. தவிரவும் பல்லவ அரசகுமாரன் ஒருவன் மேற்கூறியுள்ள சோழ மன்னனைச் சிறைசெய்ய ஹாய்ஸால பெல்லாலர்கள் அவனை விடுதலை செய்து திரும்பவும் சிம்ஹாஸனத்தில் வைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஹாய்ஸால பெல்லாலர்கள் மேற்குச் சாளுக்கியர்களது தென்னாட்டை ஆக்கிரமித்துக்கொண்டு தெற்கில் ஏற்பட்ட வியவகாரங்களிலும் தலையிட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்கள் பாண்டியர்களுக்கு விரோதமாக நின்று சோழர்களைக் காப்பாற்றினார்கள். ஹாய்ஸாலன் அரசன் வீரசோமேசுவரன் என்றவன் ஸ்ரீரங்கத்திற் கருகில் கண்ணனூரெனப்படும் ஒரு புதிய நகரத்தைக் கட்டி அதில் ஹாய்ஸாலர்களிருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான்.

விஜயாலய வமிசத்தின் சோழ மன்னர்களில் கடைசி மன்னனான மூன்றாவது ராஜேந்திர சோழன் 1246வது வருஷத்தில் பட்டத்திற்கு வந்து 1267வது வருஷம் வரைக்கும் ஆண்டான். அவன் மேற்கூறியுள்ள ஹாய்ஸாலர்களுக் கிடங்கொடாதிருக்க முயன்றது கொஞ்சம் பயன் பெற்றிருந்ததென்றே ஏற்பட்டுள்ளது.

1251வது வருஷம் முதல் 1261வது வருஷம் வரை பாண்டியர்களுக்கு இச் சோழதேசத்தில் பிரபல மடைந்த

காலம். ஏனெனில் முதலாவது ஜடாவர்ம சுந்தரபாண்டியன் வடக்கில் நெல்லூர்வரை தனது அதிகாரத்தைக் கொண்டு சென்றிருந்தான். அவன் ஸ்ரீரங்கத்துக் கோவிலில் 1260யில் ஒரு பாகத்திற்குத் தங்கத் தகடுகள் போட்டு வைத்தான். தவிரவும் அக் கோவிலுக்கு அனேகம் கொடைகள் அளித்திருந்த விஷயமும் ஏற்பட்டுள்ளது.

1310வது வருஷத்தில் மாலிக்காபாது படையெழுச்சியினால் தென் இந்தியா அல்லோல கல்லோலப் பட்டது. இந்த மாலிக்காபர் டெல்லி சக்கரவர்த்தியின் சேனைத் தலைவன். தென் இந்தியாவைப் படையெடுத்துவந்த முதல் முகம்மதியன் இவனே. இவனது படையெழுச்சி ஹாய்ஸாலர்களை நசிக்கச்செய்து விஜயநகர ராஜ்ஜியம் ஏற்பட அனுகூலமாயிற்று. முகம்மதிய சரித்திர கர்த்தா பெரிஸ்டா (Ferishta) என்றவர் மேற்கூறிய மாலிக்காபர் ராமேசுவரம் வரை நடக்கச் சென்றிருந்தானும். எது எப்படியிருக்கினும் அவன் புறப்பட்டுப் போனபிறகு சுமார் ஐம்பது வருஷ காலம் வரைக்கும் மதுரையும் திரிச்சிராப்பள்ளியும் முகம்மதிய அரசர்களால் ஆளப்பட்டு வந்தன. பாண்டிய, சோழ மன்னர்களது பராக்கிரமும் இச் சமயம் படுத்துப்போயிருந்ததாகத் தெரிகிறது. சேரமன்னன் ரவிவர்மன் என்ற குலசேகரன் இத் தீபகல்பத்தின் குறுக்கே ஸ்ரீரங்கத்திற்கும் காஞ்சிபுறத்திற்கும் போயிருந்தனனும்; ஆதலால் பாண்டிய சோழர்களது அதிகாரம் இக்காலத்தில் நசித்துத்தான் போயிருக்கவேண்டும்.

இதற்கிடையில் ஹாய்ஸால மன்னர்களது அதிகாரத்தின் கீழிருந்த ஒரு அதிபதி துங்கபத்திரா நதிக் கரையில் விஜயநகரம் என்னு மிடத்தில் ஒரு ராஜ்ஜியத்தை ஸ்தாபித்திருந்தான். அது தென் இந்தியா முழுவதையும் அடக்கிக்



கொண்டிருந்து, இரண்டு நூற்றாண்டுகள் முகம்மதியர்கள் மேல்நோக்கி வராது தடுத்துக்கொண்டிருந்தது.

மாலிக்காபாது படையெழுச்சிக்குப் பிறகு ஒரு அரை நூற்றாண்டு காலம் மதுரையில் ஏற்பட்ட முகம்மதிய மன்னர்கள் அதையும் திரிச்சிராப்பள்ளியையும் ஆண்டுவந்தார்கள். தஞ்சாவூரின் பெரும்பாகம்கூட அவர்கள் ஆண்ட நாட்டில் அடங்கியிருந்திருக்கலாம். இவ்வரசர்கள் தொண்டமண்டலத்தையும் திரிச்சிராப்பள்ளியையும் ஜெயித்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 1365வது வருஷ சுமாரில் அவர்கள் விஜயநகர சைனியத்தால் ஒடுக்கப்பட்டார்கள். இந்த விஜயநகர வமிசத்தைச் சேர்ந்த கம்பண உடையார், விருபாக்ஷன் என்ற இரண்டு அரசகுமாரர்கள் பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் மதுரையிலும் தென் ஆற்காட்டிலும் தங்களது அதிகாரத்தை ஸ்தாபித்திருந்தார்கள். திரிச்சிராப்பள்ளியும்கூட அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்திருக்கலாம். விருபாக்ஷன்தான் தென் நாடுகள் முழுவதையும் ஜெயித்துவிட்டிருந்ததாகப் பெருமை கூறிக்கொண்டிருந்ததாக ஏற்பட்டிருந்ததிலிருந்து பதினான்காவது நூற்றாண்டின் மத்தியில் சோழ நாடு விஜயநகர ராஜ வமிசத்தினர்களால் ஜெயிக்கப்பட்டுத்தானிருக்கவேண்டும்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் சாளுவர்கள் விஜயநகர ஆதிபத்தியத்தை அபகரித்துக்கொண்டு நாட்டை ஆண்டுவந்த விஷயம் ஏற்பட்டுள்ளது. இந்த சாளுவர்களுக்குப் பிறகு பதினாறும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் துளுவ வமிசத்தார்கள் வந்தார்கள். பிரக்யாதிபெற்ற கிருஷ்ணராயர் துளுவ பரம்பரையைச் சேர்ந்தவரே.

இதற்கிடையில் விஜயநகர ஆதிபத்தியத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த நாயக்கர்கள் மதுரையைப் பழைய பாண்டிய

வமிசத்து அரச குமாரர்களுடன் சேர்ந்து ஆண்டுவந்தார்கள். 1532வது வருஷத்தில் திருவாங்கூர் அரசன் பாண்டிய நாட்டின் பெரும்பாகத்தை ஜெயித்துக்கொண்டு விஜயநகர அதிகாரத்தை அவமதித்தான். அவனை ஒடுக்கவும் பாண்டிய மன்னனுக்கு உதவி புரியவும், 1530வது வருஷம் முதல் 1542வது வருஷம் வரைக்கும் விஜயநகர அரசனாக இருந்ததாகக் கூறப்பட்டுள்ள அச்சுதன் என்பவன் தென் இந்தியாவின் கோடிவரைக்கும் படையெடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்தான். தாம்பிரபர்ணி தீரத்தில் அவன் ஒரு ஜயஸ்தம்பம் ஸ்தாபித்ததுமன்றி, திருவாங்கூர் அரசனையும் கப்பம் கட்டும்படி செய்து பாண்டிய ராஜனது மகளையும் மணந்துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. 1547வது வருஷத்திற்கும் 1558வது வருஷத்திற்குமிடையில் இந் நாட்டை ஆண்ட விட்டல் ராஜா என்ற விஜயநகரவமிச ராஜகுமாரன் ஒருவன் 1553வது வருஷத்தில் இரண்டாவது தடவை திருவாங்கூரைப் படையெடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது.

1559வது வருஷத்தில் பிரசித்திபெற்ற நாயக் வமிசம் மதுரையில் ஸ்தாபிக்கப்பட்டது. முகம்மதியர்கள் மதுரையை 1736வது வருஷத்தில் பிடித்துக்கொள்ளும் வரை சுமார் இரண்டு நூற்றாண்டுகள் காலம் அவ் வமிசம் அந் நாட்டை ஆண்டுவந்தது. மேலே கூறியுள்ள விட்டல் ராஜாவினது ஆட்சியின் கடைசி காலத்தில் திரிச்சிராப்பள்ளிக் கருகிலிருந்த ஒரு சோழ அதிபன் மதுரை நாட்டைப் படையெடுத்துப் பாண்டிய மன்னனை சிங்காதனத்தினின்றும் அகற்றினான். அப்படித் தனது ராஜ்ஜியத்தை இழந்த அம் மன்னனும் விஜயநகர மன்னனது உதவியை நாடி நாகம நாயக்கன் என்ற ஒருவன் கீழ் ஒரு சைனியம் அனுப்பப்பெற்றான். நாகமநாயக்கும் சுளுவில் சோழ மன்னனை



அடக்கிவிட்டு மதுரையைப் பிடித்துக்கொண்டு தான் சுயேச்சையை அடைந்துவிட்டதாகக் கூறிக்கொண்டு பாண்டியனுக்கு உதவிபுரிய மறுத்துத் தானே அதன் அரசனானான். இச் சங்கதி கேள்வியுற்ற விஜயநகர மன்னனுக்கு வந்த கோபத்திற்கு அளவில்லை. உடனே ஒரு சபைகூட்டி அதிலிருந்த தனது நம்பிக்கை வாய்ந்துள்ள உத்தியோகஸ்தர்களிடம் அந்த நாகம நாயக்கன் தலையை அவர்களுள் யார் கொண்டுவரமுடியுமென்று கேட்டான். அங்கிருந்த ஒவ்வொருவரும் ஆச்சரியமடையுமாறு அந்த நாகம நாயக்கன் மகன் விசுவநாதன் என்றவனே அக் காரியத்தைச் செய்துமுடிப்பதாகக் கூறி முன்னுக்கு வந்தான். முதலில் சற்றுத் தயங்கினபோதிலும் பிறகு அரசன் அவனை ஒருபெரிய சைனியத்துடன் நாகம நாயக்கனுக்கு விரோதமாக அனுப்பினான். நடந்த சண்டையில் விசுவநாத நாயக்கன் அவனது தந்தை நாகம நாயக்கனைத் தோற்கடித்துச் சிறைசெய்து பின்னர் அரசனை மன்றாடிக்கேட்டு அவரது மன்னிப்பையும் அடைந்தான். ஆரம்பத்தில் அவன் முன்னுக்கு வந்ததின் கருத்து அப்படித் தனது தந்தையை அரசன் மன்னிக்கும்படி செய்ய வேண்டிய காரணம்போலும். பாண்டிய அரசன் முதலில் பேருக்கு மாத்திரமே சிங்காதனத்தில் வைக்கப்பட்டான். தனது அதிகாரம் குன்றாது விஜயநகராதிபதியின் கட்டளையை நிறைவேற்றினான். இந்த நாயக்கர்களுக்கு விஜயநகர மன்னர்களால் பூரணமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. காலக்கிரமத்தில் பாண்டிய சோழர்களது அதிகாரமிருந்தவிடமே தெரியாமல் நசித்துப்போக விசுவநாத நாயக்கன் நாயக பரம்பரையின் முதல் அதிபதியானான். அவனது ராச்சியம் இந்தத் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவுடன் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களுள் கோயம்புத்தூர் ஜில்லாவின் பெரும்

பாகமும் அடங்கியுள்ளதாக விருந்தது. அவனது ஆட்சியின் ஆரம்பத்திலேயே அவன் திரிச்சிராப்பள்ளிக் கோட்டையை அடைந்தான். தஞ்சாவூரை ஆண்டுவந்த விஜயநகர ராஜனது பிரதிநிதி திரிச்சிராப்பள்ளி வழியாக ஸ்ரீரங்கத்திலும் ராமேசுவரத்திலு மிருந்த கோவில்களுக்கு யாத்திரை போகும் வழியைப் போலீஸ் பந்தோபஸ்து செய்யத் தவறிப்போயிருந்த காரணம்பற்றி யாத்திரிகர்கள் அக் கோவில்களுக்குப் போகாமல் பயந்திருந்தார்கள். விசுவநாதன் தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்த வல்லம்கோட்டையைக் கொடுத்து அதற்குப் பதிலாகத் திரிச்சிராப்பள்ளியைப் பெற்றுக்கொண்டான். அவன் திரிச்சிராப்புள்ளியையும் அங்குள்ள கோட்டை கொத்தளங்களையும் ஸ்ரீரங்கம் கோவிலையும் விருத்திசெய்து பலப்படுத்தியதுமன்றிக் காவேரி நதிக்கரைகளில் ஏற்பட்டிருந்த திருடர்களது பயத்தையும் அகற்றினன்.

ஆனால் விசுவநாதன் 1563-வது வருஷத்தில் இறந்துபோக அவனது மகன் குமார கிருஷ்ணப்பன் என்றவன் பட்டத்திற்கு வந்தான். அவன் லங்கையை ஜெயித்ததாகக் கூறப்பட்டுளது. அவனுக்குப் பிறகு அவனது இரண்டு குமாரர்களும் சேர்ந்து பட்டத்திற்கு வந்து ஆண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவர்களது குமாரர்களிருவரும் அவ்வாறே ஆண்டுவந்தார்கள். அவர்களில் ஒருவன் 1602-வது வருஷம் வரை ஆண்டனன். அவனுக்குப் பிறகு வந்தது முத்துகிருஷ்ணப்பன். ராமனதபுரம் சேதுபதி வமிசத்தை ஸ்தாபித்தவன் இந்த முத்துகிருஷ்ணப்பனேயாம்.

1565-வது வருஷத்தில் பாமினி ராஜ்ஜிய சுல்தான்களாகிய தக்ஷிண முகம்மதிய அரசர்கள் ஒன்றுகூடி விஜயநகர ராஜ்ஜியத்தை எதிர்த்துத் தலைக்கோட்டை என்னுமிடத்தில்



போர்புரிந்து ஜெயித்து அப்பரம்பரை க்ஷீணித்துப்போகும்படி செய்துவிட்டார்கள். விஜயநகர அரசன்கீழ் நாயக் அதிபதிகள் திரிச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், செஞ்சி, மைசூர் முதலான விடங்களி லிருந்தவர்கள் ஒருவருடன் ஒருவர் சண்டையிட்டுக்கொண் டிருந்ததால் நாட்டில் அமைதியிராமற் போயிற்று. இவர்களால் உதவிக்குக் கூப்பிடப்பட்ட முகம்மதிய அரசர்கள் இவர்களது எஜமானர்களாக ஏற்பட்டுவிட்டார்கள். வெகுகாலத்திற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக முகம்மதியர்களையும் மஹாராஷ்டிரர்களையும் ஒடுக்கித் தங்களது ராஜ்ஜியத்தை விஸ்தரிக்கச் செய்து கொண்டேவந்த ஆங்கிலேயர்கள் இந்தத் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவை 1801 வருஷம் ஜூலைமாதம் 31 தேதி அசிமுல்டவுலாவுடன் (Azim-ul-Daula) செய்துகொண்ட உடன்படிக்கைப்படி 1801 வருஷம் ஆகஸ்டு மாத முதல் கைக்கொண்டு ஆண்டுவருகிறார்கள்.

# அத்யாயம் 2

## முக்கிய இடங்கள்

**திரிச்சிராப்பள்ளி: (Trichinopoly).** இவ்வூர் இப்பெயர் கொண்ட ஜில்லாவின் பிரதான நகரம். இந்நகரம் சென்னையிலிருந்து ரஸ்தா மார்க்கமாய் 195 மைல் தூரமுள்ளதாயும், தென் இந்தியா பிரதான இருப்புப் பாதையின் வழியாக 250 மைல் தூரம் உள்ளதாயு மிருக்கிறது. இவ்வூரிலிருந்து ஒரு கிளை இருப்புப்பாதை ஈரோட்டுக்குப் போகிறது. இவ்வூர் இந்த ராஜதானியில் ஜன நெருக்கம் வாய்ந்துள்ள ஊர்களில் மூன்றாவதாம். இந்தியாவிலுள்ள நகரங்களுள் இது இருபத்தெட்டாவதெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

காவேரி நதிக்கு அரை மைல் தூரம் தெற்கில் ஒரு சம வெளியில் இந்நகரம் அமைந்துளது. இதற்குக் கிழக்கிலும் மேற்கிலும் நெல் வயல்களும், தெற்கில் இங்குமங்கும் பாறைக் குன்றுகளால் பிரிக்கப்பட்ட செம்மண் பூமியும் இருக்கக் காணலாம். இவ்வூரின் வட கிழக்குப் பாகத்தில் தான் பிரசித்திபெற்ற செங்குத்தான 273 அடி உயரம் வாய்ந்துள்ள பாறை இருக்கிறது. இதைச் சுற்றி ஏற்பட்டிருந்த புராதனக் கோட்டை, கொத்தளங்களுள் போனது போக பாக்கி காணப்படுவதும் இந்தபாகத்திலேயே. இவ்விடம் இப்பொழுதும் கோட்டையென்றே பெயரிட்டழைக்கப்பட்டு வருகிறது. இப் பாறைக்கு மேற்கில் அழகு வாய்ந்ததும் மையமண்டப முடையதுமான தெப்பக்குள மிருக்கிறது. இக்குளத்தை ஏற்படுத்தினவர் விசுவநாதநாயக்கர். இவ்வூருக்குத் தெற்கில்தான் ராணுவ ஸ்தலம் ஏற்பட்டிருக்கிறது.



அங்குதான் ஐரோப்பியர்கள் வசிக்கிறார்கள். முக்கியமான



(படம் 2.)

திரிச்சிராப்பள்ளிப் பாறைமீதுள்ள குகைக்கோயில்.

திரிச்சிராப்பள்ளி ஜங்ஷன் ஸ்டேஷன் ஏற்பட்டிருப்பதும் அங்கேதான். மேற்கிலிருப்பது புத்தூர், உறையூர் மஜராக்

கள். மற்ற ஜில்லாக்களின் பிரதான நகரங்களில் இருப்பது போலவே இங்கும் இந்த ஜில்லாவின் பிரதான உத்தியோகஸ்தர்களும் அவர்களது சிப்பந்திகளுமிருக்கிறார்கள். தவிரவும் இது தென் இந்தியா இருப்புப் பாதைக் கம்பெனியாரது தலைமை இடமாகவும் ஏற்பட்டுளது. இப்பொழுதும் இங்கு ஒரு சுதேசி ராணுவம் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திரிச்சிராப்பள்ளி நகரம் ஒரு புராதன நகரம். இங்குள்ள கோட்டை நாயக்கர்களது காலத்திற்கு முன் ஏற்பட்டிராவிடினும், பண்டைய சரித்திர காலம் தொட்டு இவ் வூரும் இதன் மஜராக்களும் முக்கியமான இடங்களாகவே கருதப்பட்டு வந்திருக்கின்றன.

திரிச்சிராப்பள்ளிப் பாறையின் மீதுள்ள குகைக் கோவில்களில் ஏழாவது நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர்களது சிலா லிகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடத்திலுள்ள குகைக்கோயில்கள் காஞ்சியை ஏழாவது நூற்றாண்டில் ஆண்ட பல்லவ அரசனாகிய முதலாவது மஹேந்திர வர்மனால் ஏற்படுத்தப்பட்டவைகள். இவருக்குக் "குணபான்" என்ற பட்டப் பெயருண்டு. இவர் முதல் முதலில் ஜைனமதத்தை அனுஷ்டித்ததினால் அப்பர் சுவாமிகளை பல விதத்தில் வருத்தியும் அம் மஹான் தமது சைவமதத்தின் பெருமையால் அவைகளிலிருந்து விடுபட்ட விபரம் பெரியபுராணத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இக்குளக் கோயிலில் இவ்விஷய சம்பந்தமாய் ஒரு வடமொழி சிலா லிகிதமுமிருந்துவருகிறது. அதன் மொழிபெயர்ப்பாவது: 'லிங்கத்தை வழிபடும் குணபான் என்னும் பெயரோடு கூடிய அரசன் இந்த லிங்கத்தினால் (பெற்ற) விபட்ச விருத்தியிலிருந்து (ஜைனமதத்திலிருந்து) திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலை நிற்பதாக? இதிலிருந்து காஞ்சியைப்



தான நகரமாகக் கொண்டிருந்த பல்லவ அரசன் திரிச்சியையும் எட்டிவந்திருந்தது தெரியவருகிறது.

பிந்திய விஜயாலய சோழ பாரம்பரையார் திரிச்சிராப்-



(படம் 3.)

திரிச்சிராப்பள்ளி குகைக் கோயிலிலுள்ள பிம்பம்.

பள்ளியையாவது உறையூரையாவது பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரை வாஸஸ்தலமாகக் கொண்டிருந்ததாக ஏற்படவில்லை. பத்தாம் நூற்றாண்டின் கடைசியில் அவர்கள்

தஞ்சாவூரில் அவர்களது வாஸஸ்தலத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் சோழ அதிகாரம் நசித்த காலத்திற்குப் பிந்திய சிலா லிகிதங்கள் உறையூர் அதிபதிகள் தாங்கள் என்று கூறிக் கொண்ட சோழ வமிசத்திய அரச குமாரர்களையே குறிக்கும், ஹாய்ஹால பாண்டிய சம்பந்தமாகவாவது, முகம்மதியர்கள் சம்பந்தமாகவாவது, அல்லது விஜயநகரராஜ்ஜிய சம்பந்தமாகவாவது திரிச்சிராப்பள்ளியைப் பற்றிய விஷயங்கள் தெளிவாக ஏற்பட்டிருக்கவில்லை. மேற் கூறியுள்ளவர்களது ஆதிபத்திய சிலாலிகிதங்கள் இவ்விடத்தில் எங்குமே காணவில்லை. எந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வூர் தஞ்சாவூர் அரசர்களிடத்திலிருந்து மதுரை நாயக்கர்களது சுவாதீனத்தில் வந்ததென்ற விஷயம் முன்னரே கூறப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலேயே பாதுகாப்பிற்கு வேண்டிய சில அநுகூலங்கள் இங்கு ஏற்பட்டிருந்தனவாயினும் விசுவநாத நாயக்கனே இதை ஒரு பக்காக்கோட்டையுடன் கூடிய ஊராகச் செய்தனன். அவன் காலம் தொடங்கி அது பல சத்துருக்களால் முற்றுகை போடப்பட்டு வந்திருக்கிறது. 1741-வது வருஷத்தில்தான் ஒரே தட்வை அது வெல்லப்பட்டது.

அதுவும் பசியினால் ஏற்பட்ட வெற்றியே ஒழிய பலத்தினால் ஏற்பட்ட வெற்றி யல்ல. திரிச்சிராப்பள்ளியை நாயக்கர்கள் இழந்ததற்குக் காரணம் துரோகச் செயலேயாம்! சந்தாசாஹேப் கோட்டைக்குள் ஒரு சிநேகிதனாக வந்து, பிறகல்லவோ தனது இயற்கைத் துரோககுணத்தைக் காட்டியிருந்தனன்! பிறகு அது அவனிடமிருந்த மஹாராஷ்டிரர்களால் வென்று எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆகாரம் சரியாகச் சேகரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. அங்கிருந்த சைனியம் முன்னரே போஜனக் குறைவுடனிருந்த சமயத்தில் மஹாராஷ்டிரர்கள் திடீரென்று வந்து எதிர்த்தார்கள். ஆதலால் பஞ்சத்தின் கொடுமையால் கோட்டையிலிருந்தவர்கள் தாங்களே அவ்விடத்தை எதிரிகளிடம் ஒப்புவித்தார்களாம். பிறகு 1743-வது வருஷத்தில் மஹாராஷ்டிரர்கள் பேசாமல் நிஜாம் வந்ததும் திரிச்சிராப்பள்ளியை விட்டுப் போய்விட அது முகம்மதியர்களது ஸ்வாதீனத்திலேயே இங்கிலீஷ்காரர்களிடம் கொடுக்கப்படும் வரைக்கும் இருந்துவந்தது. இங்கிலீஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த கர்நாடக யுத்தங்களில் அது பல தடவைகளில் முற்றுகை செய்யப்பட்டிருந்தது. நாயக்கர்களது அரண்மனை பாறைக்குத் தெற்குப்பக்கத்தில் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கட்டினவன் சொக்கநாத நாயக்கன்; அதைக் கட்டவேண்டி யிருந்த சாமான்களில் பெரும் பாகத்தை அவன் அவனது பாட்டனாது மதுரையிலிருந்த அரண்மனையிலிருந்து கொண்டுவந் திருந்தானும்.



ஊரின் மேற்கில் நாதர்ஷாவின் மஸூதி இருக்கிறது. அதில்தான் நவாப் முகம்மத அலியும், அவன் எதிரி சந்தாசாஹேபின் தலையற்றமுண்டமும் புதைக்கப்பட்டிருக்கிறது.

இம் மஸூதி முகம்மதியர்களுக்கு முக்கியமான யாத்திரை ஸ்தலங்களுள் ஒன்று. ஏனெனில் இங்கு அவர்களது புண்ணிய புருஷரெனக் கருதப்படும் சுல்தான் சைத்பாபய்ய நாதர்ஷா புதைக்கப்பட்டிருக்கிறார். இவர் பக்கிரியாகத் திரிந்துகொண்டு இங்கு வர இவரது பரிசுத்தமான நிலைமையை உத்தேசித்து முந்தி ஹிந்துக்களது கோவிலாக விருந்த இவ்விடத்தை அவரது உபயோகத்திற்காக விட்டார்களாம். இவ்விடம் அவரது வாஸஸ்தலமாக ஏற்பட்டதற்கு ஓர் கதையும் உளது. அவரது இருப்பிடத்தைப் பற்றி மேற் கூறிய கோவிலின் ஸ்தானிகரிடத்தில் அவர்

பேசிக்கொண்டிருக்கையில் அந்த ஸ்தானிகர் அப் பக்கிரியை ஒரு வளையத்தை எறியச்சொல்லி அது விழு மிடத்தில் தங்கலாமெனக் கூறினாராம். அவரும் அப்படியே செய்ய அவ்வளையமும் அக்கோவிலிலிருந்த லிங்கத்தின்மீதுபோய் விழுந்தது. ஆதலால் அக்கோவில் அப் பெரியவரது இருப்பிடமாக விடப்பட்டதாம்.

இம் மஸூதி ஒருகாலத்தில் ஹிந்துக்களது கோவிலாக விருந்ததென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இப்பொழுதும் அதில் ஒரு லிங்க மிருக்கிறது. அதை ஒரு தீபஸ்தம்பமாக உபயோகித்து வருகிறார்கள். மேற்கூறிய பக்கிரியினது வாழ்க்கை முடிவுபெற்றதும் அவரை அக்கோவிலிலேயே புதைத்துவிட்டார்களாம். அவர் புதைக்கப்பட் டிருக்கும் சமாதியைச் சுற்றி இரும்புக்கம்பிகள் போடப்பட் டிருக்கின்றன. இக்கோவிலுக்குள் ளிருக்கும் இன்னொரு சமாதி இவரது சீஷரது சமாதியாம். பிள்ளையில்லாதிருந்த ஒரு சோழமன்னனுக்கு இவர் தனக்குச் சீடனாக அவருக்கு முதலில் பிறக்கும் குழந்தையைக் கொடுப்பதாக வாக்களித்தால் மக்கட்பேறு உண்டாகும்படி செய்வதாகக் கூற, அவ்வாறே அரசனும் செய்தான். அவ்வரசனது மாமா ஜூகைன் (Mama Jugine) என்ற பெயர் வாய்ந்த முதல்புத்திரியைத் தான் இக் கோவிலில் புதைத்து அவ்விடத்தில் சமாதியும் கட்டிவைத்தார். இக்கோவிலுக்கு அரசி மீனாக்ஷியும், முகம்மது அலியும் பொருளுதவி செய்தார்களாம். நாகூரில் முகம்மதியர்களது உற்சவம் நடைபெறுவது போலவே, இவ்விடத்திலும் ரம்சான் (Ramzan) மாதத்தில் பதினாறு நாள் உற்சவம் நடைபெற்றுவருகிறது. அதை ஏராளமான முகம்மதியர்களும் பக்கத்து ஜில்லாக்களிலுள்ள இந்துக்களும் பலரும் கூடக் கொண்டாடுவது வழக்கம்.



திரிச்சிராப்பள்ளிப் பாறையின்மீதுள்ள சிவன் கோவிலும் முக்கியமானது. இதன் உச்சியிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு உச்சிப்பிள்ளையார் கோவில் என்று பெயர். திரிச்சிராப்பள்ளிப் பாறை வாயுபகவானது வன்மையினால் கொண்டுவந்து தள்ளப்பட்ட மேருமலையின் ஒரு துண்டாம். பிறகு அது ராவணனது சகோதரன் திரிசிரஸ் என்றவனது வாஸஸ்தலமாக ஏற்பட்டிருந்ததாம். அவன்தான் அங்கிருக்கும் லிங்கத்தை ஸ்தாபித்தானாம். ராமர்கூட இலங்கைக்குச் செல்லுகையில் இதைப் பூசித்துச் சென்றனராம். அதன் பின்னர் இப்பாறை கடவுளுக்கு அர்ப்பணம் செய்யத் தனது தோட்டத்தில் செவந்திச் செடிகள் பயிர்செய்து வந்த ஸாரமாரிஷியின் இருப்பிடமாகவும் ஏற்பட்டிருந்ததாம். இந்த ஸாரமா ரிஷியின் தோட்டத்திலிருந்து புஷ்பங்களைக்களவாடின தோட்டக்காரனை உறையூர் பராந்தக சோழமன்னன் மன்னித்துவிட்டதனால் கோபமூண்டகடவுள் மண் மாரி பொழியும்படி செய்து உறையூரை நாசப்படுத்தினார் என்ற கதை ஒன்றுண்டு.

திரிச்சிராப்பள்ளிப்பாறைக்கோவிலிலுள்ள கடவுளுக்கு மாத்ருபூதேசுரர் என்று பெயர் ஏற்பட்டுள்ளது. இவ் வடமொழிப் பதத்திற்குத் தாயுமானவர் என்ற பொருள் பொருந்தும். ஒரு செட்டிப்பெண் பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்க அவளது தாயார் காவேரிநதி வெள்ளத்தினால் தடுக்கப்பட்டு அவளருகில் இருக்கமுடியாமல் நேர்ந்தது. அப்பெண்மீது கருணைகொண்டு கடவுள் அவளது தாயார் வடிவத்துடன் வந்து அவளுக்கு மருத்துவம் பார்த்த காரணம் பற்றித் தாயுமானவர் என்ற காரணப்பெயர் இங்குள்ள மூர்த்திக்கு ஏற்பட்டதாம்.

பாறைக்கு மேற்கில் இரண்டு காலடிக் குறிகளும் ஒரு மீனின் உருவமும் ஏற்பட்டிருக்கின்றன. முகம்மதியர்கள் அவைகள் தங்களது சந்நியாசி நாதர்ஷாவினால் ஏற்படுத்தப்பட்டவைகள் எனவும், ஹிந்துக்களோவெனின் அவைகள் ராவணனது தம்பி விபீஷணனால் ஏற்படுத்தப்பட்டவைகள் எனவும் கூறுகிறார்கள். மீன்குறி ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணம் பாண்டிய சம்பந்தம் போலும். ஏனெனில் அவ் வமிசத்தின் அறிகுறி மீனென ஏற்பட்டுள்ளது.

திரிச்சிராப்பள்ளியில் மூன்று கல்லூரிகளிருக்கின்றன. நாஷனல் கல்லூரி (National College) என்றது கமிட்டியாரால் நடத்திவரப்பட்டு வருகிறது. செயிண்ட் ஜோஸப் கல்லூரி (St. Joseph College) இன்னொன்று. பிஷப் ஹெபார்க் கல்லூரி (Bishop Heber College) மூன்றாவது.

இவ்வூரின் மேற்கில் மூன்று மைல் தூரத்திலுள்ள உறையூர் ஆதி சோழமன்னர்களது பிரதான நகரமாக ஏற்பட்டிருந்தது. இதற்கு 'நிசுளாபுரி' யென்றும் 'கோழியூ'ரென்றும் பெயருண்டு. இவ்விடம் கரிகாற் சோழமஹாராஜன் ஒரு சமயம் யானையின்மீது சவாரி போகையில் ஒரு கோழி தைரியத்துடன் வந்து தனது யானையை எதிர்த்ததிலிருந்து பூமியின் விசேஷத்தை அறிந்து உடனே இவ்விடமுள்ள காடுகளை அழித்து நகரத்தை நிர்மாணம் செய்தனனாம். அதனால் கோழியூர் என்ற பெயர் வந்ததாம். இதன் விவரத்தைப் பட்டினப் பாலையில் காணலாம்.

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிப்
பிறங்கு நிலைமாடத் துறந்தைபோக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ
வாயிலொடு புழையமைத்து."



பின்னர் பராந்தகச் சோழன் காலத்தில் அவனது தேவிமாராகிய புவனமாதேவி என்னும் இராசமாதேவி சாரமாரிஷி திரிச்சிமலையில் சுவாமிக்காக போட்டிருந்த நந்த



(படம் 4.)

ஸ்ரீரங்கம் கோயில் சந்நிதிகள்.

வனத்திலுள்ள செவந்தி புஷ்பங்களைக் கொண்டுவரச்செய்ய அதன் நிமித்தம் ரிஷி கோபம்கொண்டு ஈசனை வேண்ட உறையூர் மண்மாரிக் குட்பட்டு ராஜதானி அழிந்தது.

ஸ்ரீரங்கம் (Srirangam). இதற்குள் இப்பெயரடங்கிய ஊருடன் அநேகம் சுற்றிலுமுள்ள கிராமங்களும்

அடங்கியுள்ளன. அவைகளுள் முக்கியமானது ஜம்புகேசு-வரம் அல்லது திருவானைக்காவல் என்ற ஊர். ஸ்ரீரங்கம் அப்பெயர்கொண்ட தீவில் திரிச்சிராப்பள்ளிக்கு மூன்று



(படம் 5.)
ஸ்ரீரங்கம் கோயில் மண்டப முன்வரித்தூண்கள்.

மைல் வடக்கில் ஏற்பட்டுளது. இதில் ஜனங்கள் பெரும் பாலர் ஹிந்துக்களே. அவர்களிலும் பெரும்பான்மையோர் பிராமணர்கள்—முக்கியமாய் வைஷ்ணவர்கள். இந்த ஊர் தென் இந்தியாவில் எங்குமே இங்குள்ள ரங்கநாத சுவாமி





(படம் 6.)
ஸ்ரீரங்கம் கோவில் கோபுரம்.

கோவில் என்ற விஷ்ணுகோவிலினால் பிரசித்தி பெற்றிருக்கிறது.

ஸ்ரீரங்கம் என்ற இவ்வூரும் இங்குள்ள விஷ்ணு கோவிலும் ஒரே எல்லையில் ஏற்பட்டிருக்குமிடங்கள். ஊரிலுள்ள வீடுகளில் பெரும்பான்மை கோவிலின் சுவருக்குள்ளாகவே ஏற்பட்டிருக்கின்றன. தென் இந்தியாவிலுள்ள எந்தக் கோவிலுமே இக்கோவிலைப்போல விசாலமான பூமியில் கட்டப்பட்டிருக்கவில்லை. ஒன்றுக்குள் ஒன்றடங்கிய ஏழு சதுரமான பிராகாரங்கள் இக் கோவிலுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இவ்வூரில் விசேஷமான இடங்களைப் பார்க்க வருகிறவர்களுக்குச் சாதாரணமாய்க் காட்டப்படுவது நாலாவது பிராகாரத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபம். ஆனால் அது அவ்வளவு பெரிதானது அல்ல. அதிக வேலைத்திறமைவாய்ந்துள்ளது. இக்கோவில் மிகவும் பெரியது. கோபுரத்தின் மீது ஏறிப்பார்த்தாலும் கோவில் முழுவதும் சரியாகத் தெரியக்கூடியது.

வெளிப்பிராகாரங்கள் நான்கிலும் நான்கு கோபுரங்களுடன்கூடிய வாசற்படிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இக்கோவிலுக்குக் கொடை அளித்தவர்களுள் நமது சக்கரவர்த்தியும் முக்கியமானவர். சக்ரவர்த்தி வேல்ஸ் இளவரசராக (Prince of Wales) 1875-வது வருஷத்தில் தென் இந்தியாவுக்கு விஜயம் செய்தபொழுது இக்கோவிலுக்கு ஒரு தங்கத் தட்டு கொடை அளித்தார். முன் ஒருசமயம் ஸ்ரீரங்கத்திலிருந்த விக்கிரகத்தின் கண்ணாக ஏற்பட்டிருந்த பிரக்கியாதிபெற்ற ஓர் வைரக் கல் பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு பிரஞ்சுக்காரனால் திருடிக்கொண்டுபோகப்பட்டு ருஷியர்ஸார் (Czar) சக்கரவர்த்தியின் செங்கோலில் வைத்து இழைக்கப்பட்டிருந்ததாம்.



இக்கோவிலிலுள்ள விக்கிரகம் இலங்கையை ஜெயிக்க ராமருக்குப் பேருதவி செய்த ராவணனது தம்பி விபீஷணனால் இங்கு கொண்டுவந்து வைக்கப்பட்டதாம். தனது நன்றியறிவைக் காட்ட ஸ்ரீராமர் அந்த விக்கிரகத்தை விபீஷணரிடம் இலங்கைக்குக் கொண்டுபோய் ஸ்தாபிக்கும்படி கூறிக் கொடுத்தனுப்பி யிருந்தார். ஆனால் வழியில் விபீஷணர் ஸ்ரீரங்கத்தில் தங்கினபொழுது அவ்விக்கிரகம் அங்கு வேரூன்றி விட்டது. அதை ஸ்ரீராமர் விபீஷணரிடம் கொடுத்த பொழுது கீழே எங்குமே வைக்கக்கூடாதெனக் கூறிக் கொடுத்திருந்ததால், அவர் அதைத் திரிசிராப்பள்ளியில் ஒரு பிரம்மசாரியாய்த் தோன்றிய உச்சிப்பிள்ளையாரிடம் கொடுத்துவிட்டு அற்ப சங்கைக்குச் சென்றார். அப் பிள்ளையார் அதைக் கீழே வைத்துவிட அது அங்கு வேர் ஊன்றிவிட்டது! அசைக்கவே முடியவில்லை!!

இவ்விடத்திய கடவுள் ஒரு டெல்லி முகம்மதிய சக்கரவர்த்தியின் மகள்மீது விருப்பம் கொண்டு, அவளது கனவில் தோன்றி அவளைத் தனது கோவிலுக்கு வருமாறு செய்தனராம். ஐந்தாவது பிராகாரத்தில் முகம்மதிய சம்பிரதாயமாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஓர் அறையில் அவளது சிலை வைக்கப்பட்டுத் துலுக்க நாச்சியார் என்ற பெயருடனிருக்கக் காணலாம். முகம்மதியர்களது சாப்பாடெனக் கருதப்படும் ரொட்டியும், பாசிப் பயறும், வெண்ணெயும், பாலும் அதற்குப் பிரதி காலையிலும் நிவேதனம் செய்யப்பட்டு வருகின்றன!!

இக்கோவிலின் பெரிய உற்சவம் மார்கழி மாதம். இருபது நாட்கள் நடைபெறும். முதல் பத்து நாள் உற்சவம் "பகல் பத்"தெனவும், பிந்திய பத்து நாள் உற்சவம்

4

"ராப்பத்"தெனவும் கூறப்படும். பகல் பத்து உற்சவத்தின் கடைசி நாள் ஏகாதசி தினமாக ஏற்படும்.

காளமேகப்புலவர் திருவரங்கத்தைப்பற்றிப் பாடியது.

பாங்கு பெறுந்திரு வைந்நூற்றிரட்டிப் பணவிடையில்
தூங்கு மதிலொரு மாவேற்றமுண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்காதுலக மனைத்தும் பெறும்
ஓங்குமரங்கத் திருப்பெட்டகத்து ளொருமணியே.

பிள்ளைப்பெருமாள் அய்யங்கார் திருவரங்கத்துத் தேர் விஷயமாகப் பாடியது:

ஒன்று மறியாத வூமர்காள், தென்னரங்கர்
இன்று திருத்தேரி லேறினார்—நின்று
வடம் பிடிக்க வாருங்கள் வைகுந்த நாட்டில்
இடம் பிடிக்க வேண்டுமென்றக் கால்.

விபீஷணரால் இவ்விடத்தில் அரங்கநாதர் பிரதிஷ்டை செய்யப்பட்ட விவரமாவது:—

காங்கைனுபிச் செழுங்கமலங் காட்ட வடிவங் கார்காட்ட
அரங்க நகர்வாய் நம்பெருமா னமர்ந்தா ரென்ப தறியாரோ
தரங்க வேலையி லங்கையர்கோன் றனக்கும் புவியோர் தங்கட்
வரங்க டரும்வை குந்தமன்றோ வளஞ்சேர் சோழ மண் [கும்
[டலமே.

திருவானைக்காவல் (Tiruvanaikkaval) அல்லது ஜம்புகேசுவரம். ஸ்ரீரங்கத்தை அடுத்த இவ்வூரில் இன்னொரு பெரிய சிவன் கோவி லிருக்கிறது. சிற்ப வேலைத் திறத்தில் இது மேலானது. இதற்கு ஐந்து பிராகாரங்கள் உண்டு. வெளிப் பிராகாரத்தினுள்தான் வீதிகளும் வீடுகளு மிருக்கின்றன. நாலாவது பிராகாரம் 35 அடி உயரமும் 6 அடி



கனமும் வாய்ந்துள்ள சுவர்களால் சூழப்பட்டுளது. ஒரு சுவர் 2436 அடி நீளமும், இன்னொரு சுவர் 1493 அடி நீளமும் வாய்ந்துளது. இப்பிராகாரத்தில்தான் 1000 கால் மண்டபமும், நிரந்தரமான ஊற்றுடன் கூடிய திருக்குளமும் ஏற்பட்டிருக்கிறது.

ஜம்புகேசுவரர் என்ற பெயர் நாகமர ஈசுவரர் என்ற பொருள் பெறும். அனேக நூற்றாண்டுகள் வயது சென்ற ஒரு நாகமரத்தின் அடியில் ஸ்தாபித்திருக்கப்பட்டிருக்கும் காரணம்பற்றி சுவாமிக்கு அப் பெய ரிடப்பட் டிருக்கிறது. திருவானைக்காவல் என்ற பெயருக்கும் "பரிசுத்தமான யானையின் தோப்பு" எனப் பொருள். அப்பெயர் வந்ததற்குக் காரணத்தைக்குறிக்கும் ஒரு கதையும் உளது: ஒரு சமயம் ஒரு யானையும், ஒரு சிலந்திப் பூச்சியும் இந்த நாக மரத்தடியிலிருந்த ஈசுவரனைப் பூசித்துக்கொண்டு வந்தன. சிலந்தியேலே கூடுகட்டித் தனது பக்தியைக் காட்ட யானை ஜலத்தைக் கொண்டுவந்து அபிஷேகம் செய்து தனது பக்தியைக் காட்டிவந்தது. யானையின் வேலை சிலந்தியின் வேலையை நாசமாக்கினதினால், சிலந்தி கோபங்கொண்டு யானையின் துதிக்கைக்குள் சென்று அதைப் பீடித்து வெளியில் வர மறுக்க யானை துதிக்கையைத்தலையில் அடிக்கயானையும் சிலந்தியும் மாண்டன. உடனே சிவபிரான் அவை யிரண்டுக்கும் முத்தி அளித்தார்.

காளமேகப்புலவர் திருவானைக்கா விநாயகர்மீது பாடியது:

ஏரானைக் காவிலுறை யென்னானைக் கன்றளித்த
போரானைக் கன்றதனைப் போற்றினால்—வாராத
புத்திவரும் பத்திவரும் புத்திரவுற் பத்திவரும்
சத்திவரும் சித்திவருந் தான்.

சமயபுரம் (Samayapuram):— இது சென்னைப் பெரிய ரஸ்தாவில் திரிசிராப்பள்ளிக்கு வடக்கில் சுமார் எட்டு மைல் தூரத்தில் இருக்கிறது. அதற் கருகில் தெற்கில் கண்ணனூர் என்ற கிராமம் இருக்கிறது. சமயபுரத்தில் தான் திரிசிராப்பள்ளியைச் சுற்றி இங்கிலீஷ்காரர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நேர்ந்த போராட்டத்தில் சில சம்பவங்கள் நேர்ந்தன. ஆனால் கண்ணனூரைப்பற்றித் தான் அடிக்கடி சிலாலிகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜம்புகேசுவரம் கோவிலில் ஏற்பட்டுள்ள ஒரு சிலாலிகிதத்திலிருந்து கண்ணனூரிலுள்ள போஜேசுவர சுவாமி கோவில் ஹாய்சால பெல்லால அரசனால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், கண்ணனூரே பதின்மூன்றாவது நூற்றாண்டில் சோழ நாட்டில் ஹாய்சாலர் பிரதான நகரமாக விருந்த விக்கிரமபுரம் என்ற ஊரிருந்த இடமென்றும் ஏற்படுகிறது. "போஜேசுவர" என்ற பதம் ஹாய்சாலேசுவர் என்றபதம் மாறுதலடைந்த பாயசாலேசுவர என்னும் பதத்தின் மாறுதலேயாம். ஒரு ஹாயசால அரசனது பெயர் மறந்துபோகப் பிரசித்திபெற்ற போஜன் என்ற பெயர் அதற்குப் பதிலாக எடுத்துக்கொள்ளப்பட்டுப் போஜேசுவர்கோவில் என்ற பெயர் வழக்கத்தில் வந்திருக்கவேண்டுமெனக் காண்கிறது. போஜன் என்ற அரசன் மத்திய இந்தியாவில் ஆண்டிருந்த ஒரு அரசனேயெனினும் அவனுக்கும் இந்த ஜில்லாவிற்கும் யாதொரு சம்பந்தமேயிருந்திருக்கவில்லையென நிச்சயமாய்க் கூறலாம். ஜம்புகேசுவரத்திய அரசன் வீரசோமேசுவரனது சிலாலிகிதத்தில் அவன் விக்கிரமபுரமென்ற கண்ணனூரில் பாய்சாலேசுவரரது விக்கிரக ஸ்தாபனம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. நாம் மேலே கூறியுள்ள பெயர் நிர்



ணயத்தை ஸ்திரப்படுத்துகிறது. கண்ணனூர்க்கோவில் தென்சுவரிலும் ஹாய்சால அரசன் சோமேசுரனது மகன் வீரராமநாத தேவனது சிலாலிகிதம் இக் கோவிலைப் பாய்ஸால அரசனது பாய்ஸாலேசுவரரது கோவிலெனக் கூறியிருக்கிறது.

இவ்வூரில் சுமார் ஒன்றுக்கொன்று கால் மைல் தூரமுள்ள இரண்டு கோவில்கள் இருக்கின்றன. பழைய சென்னைப் பிரதான ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் அவைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுள் ஒன்று போஜேசுவரர் கோவில். மற்றொன்று மாரியம்மன் கோவில். இந்த மாரியம்மன் கோவில் இந்த ஜில்லாவிலேயே மிகப் பிரசித்தி பெற்றது. இந்த மாரியம்மன் ஒரு காலத்தில் ஒரு ரிஷியின் பத்தினியாக விருந்து ஒரு தேவதையினிடம் மோகம் கொள்ள அந்த ரிஷி கோபமூண்டு அவளைச் சாம்பலாகப் போகும்படி சபித்துவிட்டனராம். அவளது தலை எரிந்து போய் மற்றப் பாகங்கள் எரிந்துபோகுமுன் அவளது மகன் அந்த ரிஷியை அவரது சாபவிமோசனம் செய்யும்படி ஏற்பாடுசெய்ய அவர் சாம்பலாகப்போன தலைக்குப் பதிலாக ஒரு கோரரூபமான அரக்கன் தலையை முண்டத்தில் வைத்துப் பொருத்திவிட்டனராம். அவளது உடம்பில் தீயினால் ஏற்பட்டிருந்த வடுக்களைப்பார்த்ததும் அவளைப் பெரிய அம்மைக்கு தேவதையாக விருக்கும்படி செய்துவிட்டனர் என்ற ஒரு கதையும் உளது. சமயபுரத்திலுள்ள இந்த மாரியம்மனது சிலை விஜயநகரம் நசித்ததும் அதிலிருந்து சில செம்படவர்களால் ஒரு தந்தபல்லக்கில் இங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டதெனக் கூறுவாருமுளர். இக் கோவிலின் உட்புறம் 1704-31-வது வருஷங்களில் விஜயரங்க சொக்கநாத நாயக்கனால் கட்டப்பட்டிருக்கவேண்டுமென

நினைக்க இடம் தருகிறது. இந்த தேவதைக்குப் பங்குனி, அதாவது மார்ச்சு—ஏப்பிரல் மாதத்தில் பத்து நாளைய உற்சவம் நடைபெறும், பத்தாவது நாளில்தான் இந்த அம்மன் ஊர்வலம் வருகிறது. அப்பொழுது சில பக்தர்கள் தீ மிதிப்பதும் வழக்கம்.

போஜேசுவரர்கோவில் ஒரு அழகிய கோவில். இதில் பல தமிழ்ச்சிலா லிகிதங்கள் உண்டு. இதற்கருகில் பழைய கோட்டைகள், அரண்மனைகளின் அடையாளங்களிருக்கக் காணலாம். இவைகளுக்குப் புதையல் மேடென்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. அங்கு பூமியில் புதையலிருப்பதாக நினைக்கிறார்கள். மழைக்குப் பிறகு அங்கு நாணயங்கள் அகப்படுவது வழக்கமாம். "குளத்திற்கும், கிராமத்திற்கும் இடையில் எழுபதுகோடி திரவியம் அபராஞ்சித் தங்கமாக இருக்கிறது. எடுத்துக்கொள்" என்ற ஒரு சிலாலிகிதம் ஏற்பட்டிருந்ததாக ஜனங்களுக்குள் ஒரு பேச்சு ஏற்பட்டுளது. ஒரு பெரிய சிலை தூக்கிய கையுடன் இந்த மாரியம்மன் கோவிலுக்கு அருகாக இருக்கிறது. அதற்கெதிராகக் கொஞ்ச தூரத்தில் நிலத்தில் இன்னொரு சிலை பூமியைக்குறித்துக் காட்டியவண்ணம் ஏற்பட்டுளது. அது புதையலிருக்குமிடத்தைக் காட்டுகிறதென நினைக்கிறார்கள்! ஆனால் மற்றச் சிலையோ பயமுறுத்தி ஓட்டிவிட ஏற்பட்டிருக்கிறதாம்!

**கரூர்:—(Karur).** இது தென் இந்தியா இருப்புப்பாதையில் திரிசிராப்பள்ளிக்கு நாற்பத்தெட்டு மைல் தூரத்தில் அமராவதி நதிக்கரையில் அது காவேரியில் சங்கமமாகுமிடத்திற்குச் சற்று தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஊர். கரூர் என்ற பதம் 'கரு' என்றும் 'ஊர்' என்றும் பிரிவுபடும். பிரம்மா தனது சிருஷ்டியை இங்கு ஆரம்பித்த காரணம்



பற்றி அப்பெயர் இவ்வூருக் கிடப்பட்டிருக்கவேண்டுமென நினைக்கிறார்கள். மேற்கூறிய காரணம்பற்றி இவ்வூரைப் பிரம்மபுரியென்றும் கூறுகிறார்கள்.

இவ்வூர் சேர மன்னர்களது ராஜதானியாக விருந்ததென நினைக்கிறார்கள். ஆனால் அது சந்தேகமே. அப்படி நினைக்க யாதொரு ஆதாரமும் ஏற்பட்டிருக்கக் காணோம். எது எப்படியிருக்கினும் பத்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்த ஊர் சோழமன்னர்கள் வசப்பட்டு அடுத்த அறுநூறு வருஷ காலங்களில் இச் சில்லாவின் மற்றப் பாகங்களின் ஐசுவரியத்தைப் பங்கிட்டுக்கொண்டு வந்ததாம். பதினாறும் நூற்றாண்டின் கடைசியில் விஜயநகர ராஜ்ஜியம்சிதைவுண்டு போனபொழுது இக்கரூர் மதுரை நாயக்கர்கள் வசமாகி, அடிக்கடி மைசூர்த் துருப்புகளால் தாக்கப்பட்டு, அடுத்த நூற்றாண்டின் இறுதியில் மைசூர் ராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இது முக்கியமான எல்லை ஸ்தலமாகவும் விருத்தியாகிக்கொண்டுவரும் இடமாகவும் ஏற்பட்டது. 1783-வது வருஷத்தில் மேற்குக் கரையிலிருந்த திப்புவின் கவனத்தை இழுக்கக் கர்னல் லாங் (Colonel Lang) என்பவன் கரூரை எதிர்த்தான். அவன் அதைப்பிடித்துக்கொண்ட போதிலும் அது 1784-வது வருஷத்திய மார்ச்சுமாத உடன்படிக்கையின் ஷரத்துப்படி மைசூர் ராஜ்ஜியத்திற்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பிறகு 1799-வது வருஷம் ஏப்பிரல்மாதம் 5-ம்தேதி அது இங்கிலீஷ்காரர்களால் பிடித்துக்கொள்ளப்பட்டு முதலில் நவாப்பினது சுவாதீனத்திலிருந்து பிறகு இங்கிலீஷ்காரர்களது சுவாதீனத்தில் வந்து நாளது வரைக்கும் அவர்களதாகவே இருந்து வருகிறது.

கொங்கு தேசத்திய ஏழு ஸ்தலங்களில் ஒன்றெனக் கருதப்பட்டுள்ள ஊர் இக் கரூர். இங்குள்ள கோவில் பசுபதீசுவரர் கோவில் என்ற சிவன் கோவில். இவ்விடத்தைப் பற்றிய புராண கதையும் ஒன்றுளது. ஒரு பசுமாடு பூமியில் புதைந்திருந்த லிங்கத்தின்மீது தனது பாலைப்பொழிய அதன் எஜமானன் அதைப் பலமாக அடித்தனன். பயந்த அப்பிராணியின் குளம்பினால் தாக்கப்பட்ட லிங்கம் கண்டு பிடிக்கப்பட்டுச் சோழ மன்னர்களுள் ஒருவனால் எடுத்து ஒரு கோவில் கட்டி அதில் ஸ்தாபனம் செய்யப்பட்டதாம். இக்கதை திரு ஆநிலை, பசுபதி என்ற பெயர்கள் அதனால் தான் ஏற்பட்டன.

கரூர்ப் புராணத்தில் தெரிவிப்பதாவது:

வருதிரீ சுரபிதொல்லை மறையவன் போலவேலை
பொருதிரை யாடை ஞாலத் தெமையருச்சனைபுரிந்து
தருகுநி சாரச ரங்க ளனைத்தையு மெனமுன் றூழா
விரைமலர் தூவித்தேநு விடையொடும்போயிற்றன்றே

கொங்குமண்டல சதகத்தில் சொல்லியிருப்பதாவது:

வீழுஞ் சடையார் பசுபதியீச்சுரர் வெண்ணெய்மலை
சூழும் புகழொடு தோற்றியநாடொழு தர்ச்சிக்கநீ
ராழுங் கடல்புவி யண்டமெலாமுற வண்டர்தொழ
வாழும் பசுவுற்பவ மானதுங்கொங்கு மண்டலமே.

இவ்வூரில் பிறந்து பிரசித்திபெற்ற கரூர்த் தேவரெனப்படும் மஹான்தான் தஞ்சை பிரகதீசுவரன் கோயிலிலுள்ள லிங்கத்திற்கு அஷ்டபந்தனம் செய்து பெருமையை அடைந்தவர். இவர் பிரசித்த சைவசமயியானாலும் விஷ்ணுவினாலும் பாண்டி நாட்டிலும் ஸ்ரீரங்கத்திலும் அநுக்கிரஹிக்கப்பட்டவர். இவர் பல அற்புத செயல்களைச் செய்தனர்.



கொங்குமண்டல சதகத்தில் சொல்லியிருப்பதாவது:

"வாய்த்தம் பலவெச்சி லாலட்டபந்தன மாண்புறமீன்
காய்த்து மரஞ்சொரியச்செய்து பத்தி கனிந்து செந்தேன்
தோய்த்த திருவிசைப் பாப்பாடொருசித்தர் தோன்றிவா
வாய்த்த கருவூர்ப் பதிசேர்வதுங்கொங்கு மண்டலமே"

கரூருக்குச் சிலாலிகிதங்களில் "முடிவழங்கு சோழபுரம்" என்ற பெயரும் உண்டு. "ஆநிலை" என்றும் கூறுவார்கள். இங்குள்ள கோவிலின் உத்தியோகஸ்தர்கள் வீடுகளில் கலியாணமாவது, மரணமாவது சம்பவித்த காலங்களில் இரட்டை மெத்தைகள் கட்டிக்கொள்ளவும் இரட்டைச்சங்கு ஊதிக்கொள்ளவும், இன்னும் சில காரியங்கள் செய்துகொள்ளவும் அரசனால் அனுமதி கொடுக்கப்பட்டுளதாம்.

கேங்கைகோண்டசோழபுரம்:— (Gangaikonda-Cholapuram). இது ஜெயங்கொண்ட சோழபுரத்திற்கு ஆறுமைல் தூரத்தில் கிழக்காக உள்ளது. இது குருவாலப்பர் கோவில் என்ற இடத்தின் மஜரா. இவ்வூர் ஒரு நூற்றாண்டிற்கு அதிகமாகவே சோழ ராச்சியத்தின் பிரதான நகரமாக இருந்துவந்தது. ராஜேந்திர சோழனுக்கு இவ்விடம் தஞ்சாவூரைவிட விசேஷமானதென ஏற்பட்டிருந்ததென்று தெரிகிறது. கெங்கைகொண்டசோழபுரமென்றால் "கங்கையை ஜெயித்த சோழ மன்னனது ஊர்" என்று பொருள் தரும். ராஜேந்திர சோழன்தான் இப் பட்டத்தைத் தரித்திருந்தனன். தனது வடநாட்டு வெற்றிகளின் ஞாபகச்சின்னமாக இப்பட்டத்தை அவன் தரித்ததாகக் கூறியுளர். ஆதலால் இவ்வூரை ஸ்தாபித்ததும் அவனாகவே இருக்கவேண்டுமென நினைக்க இடம் தருகிறது.

அது ஸ்தாபிக்கப்பட்ட காலம் 1025—1032 வருஷங்களுக்கிடையிலேயே எனக் கொள்ளல்வேண்டும்.

இந்த கெங்கைகொண்டபுரம் என்ற ஊர் இப்பொழுது ஒரு சிறிய ஊராக விருந்தாலும் இதிலிருக்கும் சிவன் கோவில் பிரசித்திபெற்றது. இங்குள்ள பெரியலிங்கம் பாணாசுரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாம். பின்னர் ஒரு சோழராஜா இந்த லிங்கம் தன்னுடன் நேரில் மூர்த்திகரித்துப் பேசுமோவென குருக்களைக்கேட்க ஒரு குருக்கள் சிற்ப சாஸ்திரத்தில் சொல்லியபடி இம்மஹாலிங்கத்தின் அளவிற்கு ஒத்தவாறு விமானம், ஸப்தபிராகார கோபுரம், இதரமூர்த்திகள், கோயில் கட்டிமுடித்தால் அந்தப்படி நடக்குமென்றார். ராஜாவும் அப்படியே செய்து லிங்கத்தினிடம்போய் இவ்விதம் சொன்ன குருக்களுடன்போய்ப் பேசப் பிரார்த்தித்தார். உடனே சுவாமி லிங்கத்தினிடமிருந்து ஆவிர்பவித்து ராஜாவுக்குத் தத்வோபதேசம் செய்தார்! இந்தப் பெருமையை அந்த குருக்கள் வெளிஜனங்களிடம் தெரிவிக்க ஆரம்பித்ததும், அவ்விதம் தேவாகஸ்யத்தை வெளியிடாமலிருக்க வேண்டி அந்தக்ஷணம் முதல் அக்குருக்கள் ஊமையாய் விட்டாராம்! அது முதல் அவர் ஊமைக் குருக்களெனப் பெயரிடப்பட்டதாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

காளமேகப் புலவர் கங்கைகொண்டசோழேச்சுரம்
ஈசன்பேரில் பாடியது:

காவலவனெங்கள் கனவைப்பாஞ் சோழேசன்
மாவலி கங்கைமணிவாரி—ஆவனலென்
றப்புளங்கை தோய்க்கவதில் வாரிய முத்தைக்
கொப்புளமென் றாதுங் குரங்கு



இக் கோவிலைக் கட்டி முடித்தது ராஜேந்திர சோழனா அல்லது அவனது தகப்பன் முதலாவது ராஜராஜனா என்ற கேள்வி பிறப்பதுண்டு. இக் கேள்விக்குத் திருப்திகாமான பதில் ஏற்பட்டிருப்பதாகக் காணோம். கோவில்மாத்திரம் தஞ்சாவூர்க் கோவிலின் அமைப்பை அனுசரித்து அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் தஞ்சாவூர்க் கோவிலைப்போல் அவ்வளவு பெரியதாக இருக்கவில்லை. இக் கோவிலுக்குள் ஒரே சிலையில் நவக்கிரகங்கள் செதுக்கப்பட்டிருப்பதிலிருந்து சனி பகவானைப் பூஜைசெய்யும் ஜனங்கள், அவரைத் துதிக்க இங்கு வருவதுண்டு.

இக் கட்டிடத்திற்குத் தென்மேற்கில் சுமார் ஒருமைல் தூரத்தில் சிலமேடுகளிருக்கின்றன. அவைகள் சோழமன்னனது அரண்மனை யிருந்த விட மென்றதைக் குறிக்கும் அடையாளங்களென்று கூறுகின்றனர். சில விடங்களில் முன் அகழ் இருந்ததென்று காட்டக்கூடிய அடையாளங்கள் காணப்படுகின்றன. மேற்கூறியுள்ள மேடுகள், அநேகம் ஏகரா விஸ்தீரணமுள்ள பாகங்களில் காணப்படுவதால் ஒரு அரண்மனை யிருந்த பாகம் மாத்திரமே அவை யென்று நினைக்கமுடியாது. ஒரு பெரிய நகரமும்கூட அதில் அடங்கியிருந்திருக்கவேண்டும். அம் மேடுகள் மிகப் பெரிதாகக் காணப்படுவது அரண்மனை இருந்த இடத்தைக் குறிக்கலாம். இது ஒரு ஏகரா விஸ்தீரணம் வாய்ந்துளது. ஆனால் புதைக்கப்பட்டிருக்கும் கட்டிடம் அதற்கப்புறமும் இருப்பதாக ஏற்பட்டுளது. சுவர்கள் நாலடி அகலமும் பத்தடி உயரமும் வாய்ந்திருப்பதுடன் அஸ்திவாரமும் பக்கத்திய பூமி மட்டத்திற்கு ஆறடிக்குக் கீழிருந்தே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் பெரிய செங்கல்களால் கட்டப்பட்டிருந்தன.

இக்கோயிலுக்குச் சுமார் இரண்டுமைலுக் கப்பால் உக்கோட்டை (உள்கோட்டை) என்ற இடமிருக்கிறது. ஒரு மைல் வடக்காயுள்ள பள்ளிவாடி என்னுமிடத்தில் ஆதியில் ஐந்தாவது பிராகாரமிருந்ததாம். அதில் அம்மன் சந்நிதியும் ஏற்பட்டிருந்ததாம். ஊர் அழியுங்கால் அக்காலத்தில் நவாபினிடம் மந்திரியாயிருந்த ஆவடைப்பிள்ளை என்பவர் அந்த அம்மன் சிலையை எடுத்துவந்து உத்தரகைலாஸமெனப் படுமிடத்தில் பிரதிஷ்டை செய்வித்தனராம். ஒரு மைல் கிழக்கிலுள்ள மண்மேடு என்னுமிடத்தில் முன்னர் தேர் முட்டி இருந்ததாம். தென்மேற்கு மூலையில் ஒரு மைல் தூரத்தில் மாளிகை மேடு என்று ஓர் உன்னத இடமிருக்கிறது. இங்கேதான் அரண்மனை இருந்திருக்கவேண்டும், இவ்விடத்திற்கு கிழக்கில் ஒரு மெய்க்காவல் (Body guard) இருக்கிறது.

இதன் தெற்கில்தான் மேற்கூறிய உள் கோட்டை ஸ்தலமிருப்பது. மேலும் இந்த இடத்தில்யுத்த பள்ளம், ஆயுதக்களம், இடைக்கட்டு, சுண்ணாம்புக்குழி, தொட்டிக்குளம், கழுநீர்க்குளம், வண்ணாங்குழி, கட்டியக்காரன் குளம், வீர சோழன் என்ற பெயர்களை உடைத்தாயிருக்கின்றன. அக்காலத்தில் இப்பெரிய நகரத்திற்கு ஜலம்கொண்டுவர மேற்கில் பதினாறுமைல் தூரத்திலிருக்கும் பொன்னேரி எனப்படும் ஏரியிலிருந்து பூமிக்குள் கருங்கல்லால் கட்டிய வாய்க்கால்கள் ஏற்பட்டிருந்தன. தவிர இந்த ஏரிக்கு ஜலம் பாயக் கொள்ளிடத்திலிருந்து ஒரு வாய்க்காலும், வடக்கே வெள்ளாற்றிலிருந்து ஒரு வாய்க்காலும் ஏற்பட்டிருந்தன. இவைகளெல்லாம் தற்காலம் பாழடைந்து கிடக்கின்றன.

**புதுக்கோட்டை (Pudukkota):**—இதுசென்னை கவர்ண்மெண்டாருடன் நேரான ராஜ்ய சம்பந்தம் ஏற்பட்டுள்ள



ஐந்து சமஸ்தானங்களுள் ஒன்று. இதற்குவடக்கிலும்மேற்கிலும் திரிசிராப்பள்ளி ஜில்லா எல்லையாக ஏற்பட்டிருக்கிறது. அந்த ஜில்லாவின் கலெக்டரேதான் இந்த ராஜ்ஜியத்தின் ஆங்கிலராஜ்யப் பிரதிநிதி. (Political Agent) தவிரவும் இந்தப் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு மதுரை ஜில்லா தென் எல்லையாகவும் கீழ் எல்லை தஞ்சாவூர் ஜில்லாவாகவும் ஏற்பட்டிருக்கின்றன. இதன் விஸ்தீரணம் 1178 சதுரமைல்; கிழமேலில் 52 மைலும், தென்வடக்கில் 41 மைலும் வாய்ந்துள்ள சாம்ராச்சியம் இது. இதற்குப் புதுக்கோட்டை ராச்சியமென்ற பெயர் வந்ததற்கு அப் பெயருடன் கூடிய நகரமே காரணம் போலும். புதுக்கோட்டை யென்றால் புதிய கோட்டையெனப் பொருள்பட்டபோதிலும் நெடுங்காலம் இது தொண்டமான் நாடென்று இதை ஆண்ட அரசர்களது குலப்பெயரால் துலங்கி வருகிறது.

பதினேழாவது நூற்றாண்டிற்கு முன் இப் புதுக்கோட்டை ராச்சியத்தின் சரித்திரம் நிச்சயமாகத் தெரியவில்லை. புராதன ஞாபகச்சின்னங்கள் பல ஏற்பட்டிருக்கினும் இத் தேசத்தைப்பற்றி அவைகளிலிருந்து தெரியும் விஷயம் யாதுமே இல்லை. ஜெயின அரசன் சம்பந்தமான அறிகுறிகள் பல ஏற்பட்டிருக்கின்றன. புதுக்கோட்டைக்குப் பத்துமைல் தூரத்தில் வடகிழக்கில் உள்ள சித்தன்னவாசலில் ஒருபாறையைக் குடைந்து ஏற்படுத்தியுள்ள குகை இருக்கிறது. கும்பகோணத்திலிருந்து ஜெயினமதத்தினர்கள் அதைப் பார்க்கப்போவதும் உண்டு. ஆதிகாலத்தில் எழுதியிருந்ததாகக் கூறப்பட்டுள்ள தமிழ் கிரந்தமாகிய சிலப்பதிகாரத்தில் விராலிமலைக் கருகிலுள்ள கொடும்பாளூர் என்ற இடம் கூறப்பட்டுளது. உறையூரிலிருந்து மதுரைக்குப் போகும் பாலைவன மார்க்கத்திலுள்ள ஊர் அது என்று

தெரியவருகிறது. மேற்கூறியுள்ள விராலிமலையைத் தவிர்த்துத் திருமயம் என்ற இடமும் பழைய தமிழ்க்கவிகளில் கூறப்பட்டுளது. வெள்ளாறு என்ற நதி இந்த ராச்சியத்தை இரண்டாகப் பிரிக்கிறது. இந் நதி சோழபாண்டிய ராச்சியங்களுக்கு எல்லையாக ஏற்பட்டிருந்ததாகவும் தமிழ்க் கவிகளில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ராச்சியத்திற்குப் பிரத்தியேகமான நாணயமும் உண்டு. ஆயினும் சாதாரணமாக வழங்கப்படுவது இந்தியாவில் வழங்கும் ரூபாய் முதலிய நாணயங்களே. இந்த ராச்சியத்தில் அடிக்கப்பட்டு வழங்கும் நாணயம் தாமிரத்தால் செய்யப்பட்ட காசு. அது "அம்மன் காசெ"ன்ற பெயர் வாய்ந்தது. ஒரு அணாவில் பதினாறில் ஒரு பங்கு அது. அக்காசின் ஒரு பக்கத்தில் தொண்டமான்களது குலதேவதையாகிய பிரஹதாம்பிகையின் உருவம் ஏற்பட்டிருக்க, இன்னொரு பக்கத்தில் தெலுங்கெழுத்தில் 'விஜய' என்ற பதமும் காணப்படும். விஜயரகுநாதத் தொண்டமானால் இக்காசு அடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பதால் அப்பதம் அவனையே குறிக்க ஏற்பட்டுள்ளது போலும். 1888-வது வருஷம் வரைக்கும் இவ்விடத்திலேயே அடித்து வழங்கப்பட்டுவந்த இந்நாணயம் இப்பொழுது இந்நாட்டிற்கென்று இங்கிலாந்து தேசத்தில் அடித்து அனுப்பப்பட்டு வருகிறது.

இத்தேசம் பட்டுத் துணி, பருத்தித் துணி நெசவுக்குப் பெயர் போனது. தவிர வலையலுக்கும், வாசனைத் திரவியத்திற்கும், ஓடுகளுக்கும்கூடப் பெயர்போனவிடமாக இருக்கிறது. இந்நாட்டில் நல்ல ரஸ்தாக்கள் உண்டு. புதுக்கோட்டையிலிருந்து திரிசிராப்பள்ளிக்கு இரண்டு



பாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று நேராகக் கீரனூர் வழியாகச் செல்ல, மற்றது மதுரைப் பிரதான மார்க்கத்திலுள்ள இலுப்பூர் விராலிமலை வழியாகப் போகிறது.

புதுக்கோட்டையில் ஓர் இரண்டாவது தர கல்லூரி இருக்கிறது. வாணீ விலாஸ வேத சாஸ்திர பாடசாலையென்ற ஒரு ஸமஸ்கிருத கலாசாலையும் இங்குண்டு. மாணவர்களுக்கு முந்திய காலத்திய பத்ததியில் கற்பிக்கப்பட்டு வருகிறது. வேத பாடம் சொல்லப் பண்டிதர்களும், தர்க்க வித்துவான்களும், வேதாந்த ஆசிரியர்களும், வையாக்கிரணியும் அதாவது இலக்கண போதகரும், காவியபாடம் சொல்லிவைக்கும் பண்டிதர்களும் இக் கலாசாலையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை நகரில் மஹாராஜா ஆஸ்பத்திரி என்ற ஒரு ஆஸ்பத்திரி உளது. தவிரவும் கிராமாந்தரங்களில் மருந்து தந்து உதவிபுரியும் (Dispensary) ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன.

புதுக்கோட்டைக்குப் பதினொரு மைல் மேற்கிலுள்ள குடுமியான்மலையில் ஒரு சிவன்கோவில் உண்டு. அங்குள்ள சுவாமி சிகாநாதர் என்ற பெயர்வாய்ந்துள்ளார். இதில் நமது சங்கீத சாஸ்திரத்தைப் பற்றிய சிலா சாசனம் இருந்துவருகிறது.

148298
சென்னை-600 008

Printed at the Guardian Press, 158-B, Broadway, Madras.